விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 17 | குரோதனஸு சித்திரைமீ :: 1925-ம் ஸு ஏப்ரல்மீ | பகுதி 7

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவானிறவான்
சும்மா விரு சொல்லற வென்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே.

(ப-ரை.) செம்மான் மகளைத் திருடுந் திருடன்-அழகிய மானுக்கு மகளாகப் பிறந்த வள்ளிநாயகியைத் திருடிய கள்வனும், பெம்மான்-பெருமானும், முருகன்-ஞான வாசனை வீசும் ஞான சொரூபியும், பிறவான் இறவான்-ஆதியந்த மில்லாதவனுமான (இறைவன்), சும்மா இரு சொல் அற-பேசுவதை யொழித்து (மௌனமுற்று), (மனத்தையும் காணங்களையும் அடக்கி), சும்மா இரு, என்றலும்-என்று சொல்லி யருளியவுடன், அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே!—என்ன விந்தை! உலகத்திலுள்ள வஸ்துக்களில் ஒன்றும் எனக்குப் புலப்படவில்லையே! (அது வியக்கத்தக்கதே).

(பொருள் விளக்கம்)—வள்ளிமலையில் தவஞ் செய்துகொண் டிருந்த சி முனிவரது கடைக்கணேக்கத்தினல் கருத்தரித்த மானின் வயிற்றில் வள்ளிநாயகியார் அவ தரித்தபடியால், அத்தேவியாரைச் செம்மான் மகள் என்று கூறப்பட்டிருக்கிறது. அ... ...ரைத் தடுத்தாட்கொண்டு ஐம்புலன்க... ...ர் கையிலிருந்து விடுவித்து, அத்... ...ந்தைப் போதித்தருளிய முருகப் பெருமான், ஆன்மகோடிகளைக் காப்பதற்கு எவ்வித இழிதொழிலையும் புரியத் தயாராக விருக்கிறாரென்ற உண்மையையும், அப்பெருமானுடைய பெருங்குணத்தையும், ஞானபோதக சக்தியையும், தன்மையையும் விளக்கும்பொருட்டு, அப்பெருமானை, "திருடன், பெம்மான், முருகன், பிறவானிறவான்" என்று கூறப்பட்டிருக்கிறது. உலகத்தோருடைய அஞ்ஞானத்தை யகற்றுவதற்காகவே சி பெருமானல் அளித்தருளப்பட்ட முருகப்பெருமான், முன்னொரு காலத்தில் சி பெருமான் சனகாதியருக்கு அவர்கள் இச்சித்தபடி ஞானத்தைப் போதிக்குமாறு தாம் நிஷ்டையிலமர்ந்து அவர்கள் செயலற்றுத் தமது தி ்யமங்கள சொரூபத்தையே உற்றுநோக்கின ர்களாய்த் தம்மை ஒருமைப்பட்ட மனத்துடனும் மௌனத்துடனும் தியானிக்கும்படி செய்து, பிறகு அவர்கள் அவ்வாறு தம்மைத் தியானித்ததே ஞானமென்றும் ஞானத்தினலுறும் இன்பமென்றும் திருவாய்மலர்ந் தருளியது போலவே முருகப்பெருமானும் ஞானத்தை யடை தற்குரிய மார்க்கம் சொல்லற சும்மா விருப்பதுவே என்று போதித்தருளியவுடன், அப்போதகத்தைப்பெற்ற சுவாமிகளுக்கு உலகத்திலுள்ள உரு ... வேற்றுமைக ... ளெல்லா...
ஒழிந்து உலகமெங்கும் முருகப்பெருமான ... த...
ணெளியே நிறைந்திருந்ததாகத் தோன்றி...
அவ்வுண்மையையே "பொருள் ஒன்றும் ...
லனே" என்று கூறி சுவாமிகள் வியப்புற்...
எங்கும் முருகப்பெருமானது உரு த்தைக்...
பதுவே ஞானமும் இன்பமுமென் ... ன்...
கடைக்கணியல் ... குப்பில் "இரு ... ர் ... ன்...
மெ... ரொ... ர்ருந்திடத் தும் ஒரு னி ... னென்...
ச்சி கூடலாம்" என்ற அடியிலும், உலக...
லாம் காரணமான நாதத்தின் விந்து...
வத்தினுள்ளே பொருந்திய தி ்விய ஜே...
கப் பெருமான் என்ற உண்மையைக் க...
தில், "ஆங்காரமு மடங்கார்" என்று...
பாடலில், "ஓங்காரத் துள்ளொளிக்...
னுரு ... ங்கண்டு தூங்கார்" என்ற ...
காண்க.

...வென் றாகாத வில்லைபொச் சாவாக் கருவியாற் போற்றிச் செயின்.

JL
7m211, N08VB
N47.17.7.
218369

விவேக போதினி

தொ. 17] குரோதனஞூ சித்திரைமீ [ப. 7

பூர்வீக இந்தியாவில் கணிதசாஸ்திர ஞானம்

MATHEMATICS IN ANCIENT INDIA

பூர்வீக இந்துக்களின் பீஜகணித சாஸ்திர விஷயமான ஞானத்தைப்பற்றி மேனாட்டு வித்துவான்களது அபிப்பிராயத்தொடர்ச்சி:—

2. மிஸ்ஸஸ் மானிங் என்னும் பண்டிதையின் அபிப்பிராயம்:—"பொதுவாய் அராபியர்கள் ஞானவிஷயங்களைப் பிறநாட்டாரிடமிருந்து கிரகித்தவர்களே தவிர, முதன் முதல் கண்டுபிடித்தவர்களல்லர். பின்னால் ஏற்பட்டுள்ள அநேக சாக்ஷியங்களும் இத்தகைய அபிப்பிராயத்தையே ஸ்திரப்படுத்துகின்றன. ஏனென்றால், அராபியர்கள் முதன் முதல் ஐரோப்பியர்களுக்கு வெளியிட்டகாலத்துக்கு ...ன்பே, இந்தியாவில் பீஜகணிதப் பிரசாரமும் ...னமும் வெகு உந்நத ஸ்திதியிலிருந்தன ...வன்பது மாத்திரமல்லாமல், அவர்கள் நமக் ... தெரியப்படுத்தியுள்ள இலக்கங்களின் ...ர்களும் ஸம்ஸ்கிருத பாஷையில் ஏற் ...வைகளாகவே இருக்கின்றன."

...மிஸ்டர் எல்பின்ஸ்டன் என்பவரும், ...ணித ஞான விஷயமாய் இந்துக்களையும், ...களையும் ஒப்பிட்டு நோக்கில், இச் ...த்தை அபிவிருத்தி செய்து உந் ...நிதியை யடைவித்த விஷயத் ...ர்கள் கிரேக்கர்களைக் காட்டிலும் ...றமை வாய்ந்தவர்கள் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை. டயாபாண்டஸ் (Diaphantus) எனும் கிரேக்க வித்துவானைக் காட்டிலும், ஆரியபட்டர் வெகு மேன்மை வாய்ந்தவர் என்பது மாத்திரமல்ல; அவரும் அவருக்குப் பின்னுண்டான பீஜகணித வித்துவான்களும் இக்காலத்தில் நவீன கணிதக்காரர்கள் கண்டுபிடித்துள்ள அரிய கணித தத்துவங்களுள் பலவற்றையும் முன்பே கண்டுபிடித்து வெளியிட்டிருக்கின்றனர்" என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

4. எடின்பரோ ரிவியூ (Edinburgh Review) என்னும் பத்திரிகையில், ஒருவித சமீகரண நிர்ணய விஷயமாய்ச் சொல்லப்பட்டுள்ள விஷயம் கவனிக்கத்தக்கது. மேற்கூறிய சமீகரண நிர்ணயத்தைக் குறித்து, முதலில் டயாபாண்டஸ் என்பவர் பிரவர்த்தித்ததாயும், பின்பு பெர்மட் (Fermat) என்பவர் கொஞ்சம் பூர்த்தி செய்து 17-வது நூற்றாண்டிலுள்ள ஆங்கிலேய பீஜகணித வித்துவான்களுக்கு அனுப்பிவித்ததாயும், கடைசியில் அது மிகப் பிரசித்தி பெற்ற யூலர் (Euler) என்னும் வித்துவானால் சரிவரப் பரிஷ்கரிக்கப்பட்டதாயும், இவ்வாறு பரிஷ்கரித்தது ஏற்பட்ட விஷயம் அநேகமாயிரம் வருஷங்களுக்கு முன் பாஸ்கராசாரியார் (Bhaskaracharya) கண்டுபிடித்துக் கூறியுள்ளதாகவே இருந்ததாயும் ஏற்படுகிறது. மேலும், ஒரு விசேஷப் பிரசினத்தை நிர்ணயித்துச் சொல்வதற்காக பாஸ்கராசாரியார் காட்டியுள்ள ரீதியானது, 1657-ம் வருஷத்தில் லார்ட் ப்ரௌங்கர் (Lord Brounker) என்னும் பண்டிதரால் கண்டறியப்பட்ட முறைக்கு எவ்விதத்திலும் சரியாயிருக்கிறது. அத்தகைய பொதுப் பிரசினத்தை நிர்ணயிப்பதற்கான வழியைக் கண்டு பிடிக்க யூலர் வெகுவாறு முயன்றும் முடியாமல், 1767-ம் வருஷத்தில் டிலா க்ராஞ்ச் (Dela Grange) அதைச் சாதித்தார். இத்தகைய நிர்ணய விதியை வ்யக்தமாயும் பூர்ணமாயும் பிரம்ம குப்தர் (Brahma Gupta) என்னும் ஹிந்து வித்துவான் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கண்டறிந்து வெளியிட்டிருக்கிறார். இது விஷயமும், மேற்கூறிய எடின்பரோ ரேவ்யூ பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

...புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

ஆங்கிலத்தில் கால்குலஸ் (Differential Calculus) என்பது கணிதத்தின் ஒரு விசேஷபாகம். ஐரோப்பியர்கள் இதை முதன் முதல் தாங்களே கண்டுபிடித்ததாகச் சொல்லிக் கௌரவம் பாராட்டி வருகிறார்கள். ஆனால், இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்துக்களுக்குத் தெரிந்த விஷயமே. உலகிலுள்ள கணித சாஸ்திர வித்துவான்களுள் முதன்மையோரெனச் சொல்லத்தக்க பாஸ்கராசாரியர் இதைப்பற்றித் தமது கிரந்தங்களில் பற்பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் ரே என்னும் வித்துவான் இவ்விஷயத்தைக் குறித்து வெகுவாறு சர்ச்சை செய்து, பாஸ்கராசாரியாருக்கு மேற்சொன்ன கணித ஞானமிருந்தது மல்லாமல், அதை அவர் வானசாஸ்திர ஆராய்ச்சி விஷயத்தில் உபயோகப்படுத்தியிருக்கிறார் என்று நன்கு நிரூபித்திருக்கிறார். அவர் சொல்வதாவது:— "வானசாஸ்திர ஸ்புடாதிகளில், த்ருடி (Truti) என்னும் கால அளவு சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அளவு ஒரு விநாடியின் 34000-ம் பங்கில் ஒன்றாகிறது $\frac{1}{34000}$ விநாடி இவ்வித கால பரிச்சேதமானது, ந்யூடன் என்னும் ஆங்கிலேய வித்துவான் கண்டுபிடித்ததாய்ச் சொல்லப்பட்ட கால்குலஸ் (Differential Calculus) கணித தத்துவத்தைப் பூர்வம் கண்டறிந்த பாத்தியதை பாஸ்கராசாரியருக்கு உண்டென்பதை ஸ்தாபிப்பதுமல்லாமல், வானசாஸ்திர சம்பவ சம்பந்தமான கணக்கு முறைகளுக்கு வெகுவாறு பயன்படக்கூடியதாகிறது. பாஸ்கராசாரியரது கௌரவம் இது விஷயத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டதாகிறது. மேலும், ஒரு கோணத்தின் சா (Sine of an angle) என்னும் பிரமாணத்தை அளவிட்டுக் கூறுவதற்கு பாஸ்கராசாரியர் காட்டியுள்ள விதி வாய்ப்பாடும் கால்குலஸ் எனும் கணிதத்தின் மூலதத்வத்தை உபயோகப்படுத்தியுள்ளதாகத் தோற்றுகிறது. மேற்கண்ட கணிதவிஷயமாய் பூர்வீக வித்துவான் ஆர்க்கமேடிஸ் (Archimedes) ஒருவாறு வழி காட்டியுள்ளவர் என்பதால் ஏற்படும் பாத்தியதையைவிட, பாஸ்கராசாரியருக்கு மேற்கூறிய கணித விஷயமான கௌரவம மிகவும் பலமானதே."

மிஸ்டர் கோல்ப்ரூக் (Mr. Colebrook) என்பவர், "ஹிந்துக்களின கலைஞான விவரங்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையில் இருக்குங் காலத்திலும், அநேகக் கிரந்தங்கள் நஷ்டமாகி, சொற்பங்களே மிகுந்திருக்கையிலும், ஆங்காங்கே காணப்படும் கணித சாஸ்திரக் கிரந்தங்களிலிருந்து, அக்காலத்தில் அவர்கள் இச்சாஸ்திரத்திலடைந்துள்ள மேன்மையானது இக்காலத்தில் ஐரோப்பியர்கள் பெற்றுள்ள மகிமையைக் காட்டிலும் எவ்விதத்திலும் குறைந்ததன்று என்று நன்கு ஏற்படுகிறது" என்று ஆராய்ந்து பார்த்துக் கூறியிருக்கிறார்.

இவ்வாறு மேனாட்டார் பலரும் நற்புகழ்ச்சி செய்திருப்பது சுதேசாபிமானம் சற்றும் வாய்ந்துள்ள நம்மவர்க்கு ஒருவாறு சந்தோஷகரமாயும், தற்புகழ்ச்சிக்கு ஒத்தாயிருப்பினும, இவ்வித அருமையான கிரந்தங்களிலுள்ள ஞான பாகங்களைத் தெரிந்துகொள்ளாமல், நமது பூர்வீகர்கள் இவ்வித விஷயங்களில் அஞ்ஞானத்தில் ஆழ்ந்திருந்தனர் என்று ஒரு பொதுவான தப்பெண்ணங்கொண்டு, அவர்களை அவமதித்து வந்துளோம் என்பது துக்கிக்கத்தக்க விஷயம. இனியாவது இவ்வித மனப்பான்மை விடுத்து, இராஜாங்க நீதியில் நமது அபிவிருத்தியைக் கோரி, பலவாறு உழைத்துவரும் தேசாபிமானிகளும் இவ்வித கிரந்த ஆராய்ச்சிகள் செய்ய உதவி புரிந்து நமது பூர்வீக இந்தியாவிலுள்ள ஞான விளக்கை மீண்டும் மிகுந்த தேஜஸ்ஸோடு பிரகாசிக்கச் செய்வார்களென நம்புகிறோம்.

அகத்தியம் :—அகஸ்திய முனிவரால் இயற்றப்பட்ட தமிழிலக்கணம. 12000 சூத்திரங்களையுடை[illegible] தெனவும். சிற்றகத்தியம், பேரகத்தியம் என [illegible] ப்பிரிவினையுடைய தெனவும் சொல்லப்படும். [illegible] இசை, நாடகம் என்ற மூன்றுக்கும் இலக்கண[illegible] சில சூத்திரங்கள் மேற்கோள்களாகமட்டும் [illegible] கரிக்கப்பட்டுள்ளன. நூல் இறந்தொழிந்தது

அகஸ்த்ய தீர்த்தம் :—இந்தியாவின் தெ[illegible] திரக்கரையிலிருந்த புண்ய தீர்த்தம். இதி[illegible] ஸரஸ் சாபத்தால் முதலையாயிருந்து ஜ[illegible] சித்துக்கொண்டிருந்தபடியால் இங்கு ஸ்[illegible] வாரில்லாதிருந்தது. அர்ஜுனன தீர்[illegible] க்கு வந்தபோது இம்முதலைக்குஞ் ச[illegible] செய்தான். பிறகு இது நாரீ தீர்த்[illegible] கியது.

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்[illegible]

காளிதாஸ மகா கவி

KALIDASA THE GREAT POET

இரகுவம்சம்:— முன் ஸஞ்சிகையில் திலீப மகாராஜன் முதிர்ந்தவயதில், ராஜ்யசுகாதிகளிலிருந்து மனமொழிந்து, பத்தினியுடன் துறவி வேடம் பூண்டு காட்டிற்குச் சென்று வானப்பிரஸ்தனாய் வசித்து வந்தான் எனக் கூறப்பட்டது. பின்னர் "ரகு மகாராஜன் தன் பிதாவிடமிருந்து கிடைத்த ராஜ்யத்தை யடைந்து, சாயங்கால வேளையில் சூரியனிடமிருந்து கிடைத்த தேஜஸைப் பெற்று அக்கினி ஜ்வலிப்பதுபோல், மிகவும பிரகாசித்து விளங்கினான். இவன் பராக்கிரமத்தில் திலீபனைக் காட்டிலும அதிசயித்தவனாதலால், திலீபனது காலத்தில் சத்துருக்களின் மனத்தில் (பயத்தால்) புகைந்து கொண்டிருந்த அக்கினியானது, ரகு பட்டத்திற்கு வந்ததைக் கேட்டதும், ஜ்வலித்து விளங்கியது போலாயிற்று. இவனது ராஜ்யபரிபாலனம் வெகுவாறு மெச்சத்தக்கதாயிருந்தது. அபராதத்துக்குத்தக்க தண்டனையே விதிக்கவேண்டும் என்கிற அரசியல் சம்பந்தமான முக்கிய ஒழுங்கை இவன் கைப்பிடித்து நடந்துவந்தான். அதிகக் குரூரமான தண்டனை விதிப்பதுமில்லை; துஷ்டர்களைத் தண்டிக்காது மிருதுவா யிருப்பதுமில்லை. இத்தகைய குணத்தால், "அதிக உஷ்ணமும், அதிக சீதளமுமில்லாத தென்றற்போல், இவன் பிரஜைகளின் மனதை இழுக்க வல்லவனாயிருந்தான்." தன் மந்திரிகளின் உபதேசப்படி நன்னெறியிலேயே ஒழுகிவந்தான். துஷ்டர்களின் துர்ப்போதனை அவன் செவி ...ல் ஏறவேயில்லை. ராஜ்யத்தில் எங்குபார்த் ...லும் விசேஷச் செழிப்பும், விருத்தியும் கா ...பட்டன. இத்தகைய நற்குணங்களால், ...காராஜன திலீபனைக் காட்டிலும் விசே ...பாதிபெற்று விளங்கினான். நாடுகளிலும் ...ளிலும் எல்லாப் பிரஜைகளும் அவனது ...சயங்களைக் கீதமபாடிக் கொண்டா... "பார்ப்பவர் மனத்தைச் சந்தோ ...வதால் சந்திரனும், உஷ்ணத்தால் ...சய்வதால தபனனும் (சூரியனும), ...ர்த்தம் பொருந்திய பெயருடை... அம்மாதிரியே ரகுவும் தருமபரி... பிரஜைகளின மனங்களை ரஞ்சிக்கச்செய்ததால், ராஜா என்னும் பெயரும் இவன் விஷயத்தில் பொருள்வாய்ந்ததாய் இருந்தது."

இவ்வாறிருக்கையில் ஒருசமயம் மழைகாலம் கடந்து, சரத்காலம் வந்தது. உத்தம சக்கரவர்த்திகளுக்குரிய திக்குவிஜயம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவன் மனத்திலுதித்தது. அதற்கு வேண்டிய முஸ்தீப்புகளும், நகரப் பாதுகாப்பு முதலிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ரத, கஜ, துரக பதாதி, நாவிகம் (மாலுமிகள்) ஆடவிகம் (ஆரண்ய சேனை) என்கிற ஆறுவித சேனைகள் தயாரிக்கப்பெற்றன. இத்துடனும், தன் சரீரப் பாதுக்காப்புக்கு வேண்டிய கஞ்சுகர்களோடும் ரகுமகாராஜன் திக்குவிஜயஞ் செய்யப் புறப்பட்டான். நகரத்திலுள்ள விருத்த ஸ்திரீகள் மங்களம்பாடி அவன்மீது பொரிகள் பொழிந்தனர். சமுத்திரம் கடையப்பெற்ற காலத்தில், திருப்பாற்கடலின் அலைகளிலிருந்து சிதறின திவலைகளால் பூசப்பட்ட திருமால் போல், அச்சமயம் ரகு விளங்கினான். சைன்யம் வெகு பலமாயிருந்தது அது செல்லுகையில் உயரக் கிளம்பிய புழுதியால், பூமிப்பிரதேசமானது மேகங்களடர்ந்த ஆகாயம்போல் காணப்பட்டது.

வழியில் அநேக ராஜ்யங்களை ஜயித்து நிர்ஜலப்பிரதேசங்களைத் தடாகாதிகளால் நீர் நிறைந்தவைகளாயும், ஆழமான நதிகளில் ஆங்காங்கே வாராவதிகள் போட்டு எளிதில் கடக்கக்கூடியவைகளாயும், அடர்ந்த காட்டுப் பூமிகளிலுள்ள விருக்ஷாதிகளை வெட்டி வாஸயோக்கியமானவைகளாயும் செய்துகொண்டு, ரகுமகாராஜன் கிழக்கு சமுத்திரத்தை நோக்கிச் சென்றான். அநேக அரசர்கள் முறியடிபட்டு, ரகுவுக்கு வணங்கி, கப்பங்கட்டச் சம்மதித்தனர். இவ்வாறு வங்காளம் முதலிய தேசங்களை ஜயித்துக்கொண்டு, பனை முதலிய விருக்ஷங்களால் அடர்ந்துள்ள கீழ் சமுத்திரச் சுற்றுபூமியை யடைந்தான். இங்கு, கப்பற் சண்டையில் பிரசித்தி பெற்றுள்ள வங்க தேசத்தவர்கள் ரகுவை எதிர்த்து வந்து, முறியடிபட்டு, ஏராளமான திரவியங்களை காணிக்கையாக அளித்தனர். ரகுவின் இவ்வித ஜயத்தைக் குறிப்பிடத்தக்க ஜய ஸ்தம்பங்கள் கங்கையில் ஆங்காங்கே நாட்டப்பட்டன.

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா னுள்ளிய துள்ளப் பெறின்.

பின்னர் யானைகளால் பாலங்கள் ஏற்படுத்தி, கபிசை என்னும் நதியைத் தாண்டி, உத்கலா தேயத்தவர்களை ஜயித்து, அவர்கள் உதவியால் அங்குள்ள வழிகளை நன்கறிந்து கலிங்க தேசத்தை நோக்கிச் சென்றான். கலிங்காதிபதியோ யானை பலம் மிகுந்தவன்; முற்காலத்தில் பர்வதங்களின் இறக்கைகளை வெட்டியெறிந்துவரும் இந்திரனை மலைகள் கற்களை வாரியெறிந்து எதிர்த்தது போல், அவன் ரகுவை எதிர்த்துத் தீவிரமாய் போராடலுற்றான். ரகுவும், வெகுநேரம் யுத்தஞ்செய்து. அவனது பாணவர்ஷங்களைத் தடுத்து அவனைத் தோல்விபடைவித்து, ஜயச்ரீ சமேதனாய் விளங்கினான். அவனது சைநியங்கள் குதூகலமடைந்து, யதேஷ்டமாய் மதுபானாதிகள் செய்து களித்தன. இவ்வாறு ரகு, மகேந்திரநாதனுடைய புகழை அபகரித்தான். ஆனால் அவனது ராஜ்யத்தை அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

பிறகு ரகு மகாராஜன் பாக்கு மரச்சோலைகளடர்ந்த சமுத்திரக்கரை வழியே, தெற்கு திக்கை நோக்கிச் சென்று, காவேரிக் கரையையடைந்தான். மலயபர்வதத்தின் சமீபத்திலுள்ள மிளகு செடிகள், ஏல விருக்ஷங்கள், சந்தன மரங்கள் இவைகள் அடர்ந்த வனப்பிரதேசங்களில், அவனது சைநியங்கள் தண்டிறங்கின. பிறகு அவன் வெகுபராக்கிரமம் வாய்ந்த பாண்டியர்களை ஜயித்து, அவர்களால் காணிக்கையாயளிக்கப்பட்ட தாமிரபர்ணி நதியிலுண்டான உத்தம முத்துக்களை அங்கீகரித்தான். பின்னர் அவன், மலயம், துர்த்துரம் என்ற மலைகளில் பிரவேசித்து, அங்கு யதேஷ்டமாய் ஸஞ்சரித்து, சுகங்களை யனுபவித்து மேற்கு முகமாக ஸஹ்யபர்வதத்தை நோக்கிச் சென்றான். இவனது சைநியவெள்ளமானது வெகு தூரம் வியாபித்து நின்றதைப் பார்த்தால், "முற்காலத்தில் பரசுராமனது அஸ்திரத்தால் ஸஹ்யபர்வதத்திலிருந்து வெகு தூரம் அப்புறப்படுத்தப்பட்ட சமுத்திரமானது இவனது சைநியத்தால் அம்மலையுடன் சம்பந்தப்பட்டுள்ளதுபோல் தோற்றிற்று.

அப்பால் ரகு மகாராஜன் கேரளதேயத்தார்களை முறியடித்து, த்ரிகூடபர்வத சிகரத்தில் தனது ஜயஸ்தம்பத்தை நாட்டினான். பின்னர், அங்கிருந்து தரை மார்க்கமாய்ச் சென்று பாரஸீகர்களை எதிர்க்க ஆரம்பித்தான். வெகு சூரர்களான இவர்களை ரகு தனது பராக்கிரமத்தால் ஜயிக்க முயன்றது, ஒரு யோகி தனது தத்வஞானத்தால் இந்திரியங்களாகிற சத்துருக்களை வசப்படுத்துவதை ஒத்ததாயிருந்தது. பாரஸீகர்கள் யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள். குதிரைப்படை மிகுந்தவர்கள். இவர்களோடு ரகு வெகுகொடிய யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. அவனாலடிபட்டு அநேகர் மாண்டனர். மீதியிருந்தவர் அவனைச் சரணமடைந்து உயிர் தப்பினர். "உயர்ந்த ஸ்வபாவமுள்ளோரின் கோபமானது எதிரியின் வணக்கத்தால் சாந்தியடையுமல்லவா?" மிகவும் களைப்படைந்துள்ள ரகுவின் சைநிகர்கள் அங்குள்ள திராக்ஷ வனங்களில் பற்பல மதுக்களைப் பானஞ்செய்து களை தீர்த்துக்கொண்டனர்.

பிறகு ரகு வடக்கு திக்கை நோக்கி புறப்பட்டு, ஸிந்து நதியைக் கடந்து, பலவித ஹூணர்களை முறியடித்தான். அவனது விக்கிரமத்தைச் சகிக்க முடியாமல், காம்போஜர்கள் உயர்ந்த ஜாத்யசுவங்களையும் பலவித தனங்களையும் காணிக்கையாயளித்து ரகுவுக்கு வணங்கினர். பிறகு ரகு இமயமலையின் மீது ஏறி, அங்குள்ள வேடர் முதலிய பலவித மலைவாசிகளோடு போராடி, அவர்களைத் தோல்விபடைவித்தான். ரகுவின் புகழ் எங்கும் பிரசித்தமாயிற்று. இவன் பேண்மையை கிந்நரர்கள் கீதம்பாடினர். பூர்வம் இராவணனால் கைவலிவால் சலிக்கப் பட்டதாய்க் கூறப்பட்டுள்ள கைலாஸ சிகரத்தை தான் சென்று அனுபவிக்க இஷ்டமில்லாதவன் போல, ரகுமகாராஜன் அங்கு போகாமல், இமயமலையிலிருந்து கீழிறங்கி, லோஹித்யா என்னும் நதியைக்கடந்து, காமரூபம் என்னும் நாட்டின் அதிபதியை ஜயித்து அவனால் ஸமர்ப்பிக்கப்பட்ட யானைப்படையையும், பலவித ரத்தினங்களையும் அங்கீகரித்தான். ரகு இவ்வாறு திக்குவிஜயஞ் செய்து, அநேக நாட்டரசர்களைத் தன்வசமாக்கி, ஏராளமான செல்வப் பெருக்கடைந்தான். இதனால் பாமரர்கள்போல் செருக்கடையாமல், தனது திரவியத்தை ஸத்பாத்திர விநியோகஞ் செய்யக் கருதி, 'விச்வஜித்' என்னும் வேள்வியைச்

(இதன் தொடர்ச்சி 227-ம் பக்கம் பார்க்க).

ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே ||
வபுரளககுலாவ்ருதானனப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா"

(80) பாலோபி சைலோத்தரணைக்ரபாணி:
நீலோபி நீரந்த்ரதம: ப்ரதீப: |
தீரோபி ராதா நய நாவபத்தோ
ஜாரோபி ஸம்ஹாரஹர: குதஸ்த்வம் ||

"பகவானே! உமது விந்தை என்னே! நீர் சிறு குழந்தையா யிருந்தும், கைநுனியால் கோவர்த்தனகிரியைத் தாங்கிநின்றீர். கறுத்த திருமேனியோடு கூடியிருந்தாலும், நீருண்ட மேகத்தில் எழும் மின்னல் போல் ஜ்வலிக்கிறீர். வெகு தைரியம் பொருந்தினவராயினும், ராதையின் கண்பார்வைக்குக் கட்டுப்பட்டுத்தவிக்கிறீர். கோபஸ்திரீகளிடம் மனம் ஈடுபட்டு அவர்களோடு ஜாரகிருத்தியங்கள் செய்பவராய்த் தோற்றினும், உம்மைப் பஜித்து வணங்குவோரின் ஸம்ஸார துக்கங்களைப் போக்கவல்லவராய் இருக்கிறீர். இவ்வாறிருப்பது எங்ஙனம?" பகவானது பெருமையையும், ஸௌலப்யம் முதலான கல்யாண குணங்களையும், விரோதாபாஸம் என்னும் ஒரு வாக்கணி மூலமாய் விசேஷித்துக் கூறுகிறார் லீலாசுகர். உலகில் சாதாரணமாய், ஒன்று சேர்ந்திருக்க முடியாத குணங்கள் பகவானிடம் கலந்து விளங்கின என்று சொல்வதால, அவரது மகிமை நன்கு எடுத்துரைக்கப்பட்டதாகிறது.

(81) பாலாய நீலவபுஷே நவகிங்கிணீ—
ஜாலாபிராம ஜகனாய திகம்பராய |
சார்தூல திவ்யநக பூஷண பூஷிதாய
நந்தாத்மஜாய நவநீத முஷே நமஸ்தே ||

"பாலரூபியான பகவானே, மேகம்போல் நீலமான திருமேனியுடையவனே, அழகிய சலங்கைமாலை தரித்துள்ள இடுப்போடுகூடியவனே, வஸ்திரங்களணியாமல் நிர்வாணமாயிருப்பவனே, புலி நகத்தால் செய்யப்பெற்ற ஆபரணத்தால் அலங்கரிக்கப்பட்டவனே, நந்தனது புதல்வனே, வெண்ணெய் திருடும் சுவபாவமுள்ளவனே, உனக்கு நமஸ்காரம்." இவ்வாறு பகவானுடைய அதிசுந்தரமான குழந்தைப் பருவத்தைத் தியானித்து வர்ணிக்கிறார் லீலாசுகர்.

(82) பாணௌ பாயஸ பக்த மாஹித ரஸம்
பிப்ரன் முதா தக்ஷிணே
ஸவ்யே சாரத சந்த்ர மண்டலநிபம்
ஹையங்கவீனம் ததத் |
கண்டே கல்பித புண்டரீக நகம—
ப்யுத்தாம தீப்திம் வஹன்
தேவோ திவ்ய திகம்பரோ திசது ந:
ஸௌக்யம் யசோதாசிசு: ||

கார்வண்ணனது பால்யாவஸ்தை வேறுவிதமாய் வர்ணிக்கப்படுகிறது. "வலதுகையில், பாலில் பக்குவம் செய்யப்பட்டு அருசுவை பொருந்திய அன்ன கபளத்தையும், இடதுகையில் சரத்கால சந்திரனது காந்திக்கொப்பான புதிய வெண்ணெயையும் வைத்துக்கொண்டிருப்பவரும், கழுத்தில் ஒப்பற்ற ஒளியுள்ள புலி நக ஆபரணத்தை அணிந்துள்ளவரும், எல்லா உலகங்களுக்கும் ஈச்வரனும், ஆடை யணியாமல, பிறந்த திருமேனியுடன் விளங்குபவருமான யசோதையின் பாலன் நமக்கு க்ஷேமத்தை யளிப்பாராக.

(83) அஞ்சித பிஞ்சாபீடம்
வஞ்சித ஸௌஜன்ய வல்லவீ வலயம் |
அதரமணி நிஹித வேணும்
பாலம் கோபால மநிசம வலம்பே ||

அசைந்தாடும் மயில் தோகை அணியுடையவனும், வெகு ப்ரேமையுள்ள கோபஸ்திரீகளை வஞ்சித்துக் களிப்பவனும், அழகிய உதட்டில் புல்லாங்குழல் வைத்து இனிய கானஞ் செய்பவனும, பாலரூபியுமான கோபாலனை இடைவிடாது சரணமடைகிறேன்."

(84) ப்ரஹ்லாத பாகதேயம்
நிகம மஹாத்ரேர்குஹாந்த ராதேயம் |
நரஹரி ஸதாபி தேயம்
விபுத விதேயம் மமானுஸந்தேயம் ||

"பிரகலாதாழ்வானுடைய பாக்கியமே உருக் கொண்டாறபோல் விளங்குபவனும், வேதங்களாகிற ஒரு பெரிய மலையின குகைக்குள் கண்டறியத்தக்கவனும், நரஸிம்மன் என்னும் புண்ணியமான பெயருடன் பிரகாசிப்பவனும் ஞானிகள், தேவர்கள் இவர்கள் விஷயத்தில் ஒரு தாசன்போல் பணிந்து நடப்பவனுமான திருமாலே என்னால் ஸதா தியானித்து பஜிக்கக்கடவன்!"

(85) ஸம்ஸாரே கிம் ஸாரம்
கம்ஸாரே: சரணகமலபரிபஜனம் |
ஜ்யோதி: கிமந்தகாரே
யதந்தகாரே ரனுஸ்மரணம் ||

"துக்கரூபமாய் ஸம்ஸாரத்தில் ஸுகத்தையளிக்கக்கூடியது எது? கம்ஸனைக் கொன்ற கார்வண்ணனது பாதாரவிந்தத்தை வணங்குவதே. அஞ்ஞானமாகிற இருட்டுக்கு விளக்குப் போன்றது யாது? அந்தகாஸுரனை யழித்தருளிய திருமாலின் தியானமே." கலிகாலத்தில் யோகம், கடுந்தவம் கஷ்டமான விரதானுஷ்டானங்கள் முதலியவற்றால் ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து மோக்ஷமடைதல் அரிதாகையால், பகவானுடைய திவ்விய அவதார சரித்திரங்களைத் தியானித்து, அவர் பாதங்களில் பக்தியோடு பணிவதே பேரானந்தத்துக்கு ஒரு முக்கியஸாதனம் என்பது கருத்து.

(86) கஸ்த்வம் பால பலானுஜ: கிமிஹதே
மன்மந்திராசங்கயா
யுக்தம் தந்நவநீத பாத்ர விவரே
ஹஸ்தம் கிமர்த்தம் ந்யஸே: |
மாத: கஞ்சன வத்ஸகம் ம்ருகயிதும்
மாகா விஷாதம் க்ஷணாத்
இத்யேவம் வரவல்லவீ ப்ரதிவச:
க்ருஷ்ணஸ்ய புஷ்ணாது ந: ||

கோகுலத்தில் பகவான் இளம் பருவத்தில் செய்தருளிய லீலாசேஷ்டைகள் அநேகம். ஒரு சமயம், அவர் ஒரு கோபிகையின் வீட்டிற்கு புகுந்து வெண்ணெய் முதலியவற்றைத் திருடிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், அவள் கையுங் களவுமாய் அவரைக் கண்டு, அங்குவந்த காரணம வினவ, அவர் சொன்னபதில் வெகுவிநோதமானது: "குழந்தாய், நீ யாரப்பா? நான் பலராமனது தம்பி. உனக்கு இங்கு என்ன காரியம்? இது என் வீடு என்று பிரமித்து இங்குவந்தேன். அது சரிதான். இருக்கட்டும். எதற்காக வெண்ணெய் பாண்டத்தினுள் கைவிட்டுக் கொண்டிருக்கிறாய்? அம்மணி, காணாமற்போன ஒரு கன்றை இங்குத் தேடிப்பார்க்கிறேன். க்ஷண நேரம் கோபங் கொள்ளவேண்டாம்" என்று பகவான் கோபிகைக்கு அளித்த பதில் வார்த்தையானது நமக்கு ஸுகத்தைத் தருமாக!

(87) கோபாலாஜிர கர்தமே விஹரஸே
விப்ராத்வரே லஜ்ஜஸே
ப்ரூஷே கோகுல ஹுங்க்ருதை:
ஸ்துதிசதைர் மௌனம் விதத்ஸே விதாம் |
தாஸ்யம் கோகுல பும்ஸ்சலீஷு குருஷே
ஸ்வாம்யம் ந தாந்தாத்மஸு
ஜ்ஞாதம் க்ருஷ்ண தவாங்க்ரி பங்கஜயுகம்
ப்ரேமாசலம் மஞ்சுளம் ||

"கிருஷ்ணனே! ஆயர்களின் வீட்டு முற்றங்களிலுள்ள சேற்றில் விளையாடிக் களிக்கிறாய்; அந்தணர் செய்யும் யாகாதிகளுக்குச் செல்ல வெட்கப்படுகிறாய் கோகுலத்தில் இடைச்சிறுவர்கள் உன்னை அதட்டியோ, திக்கரித்தோ பேசுவதற்குப் பதிலுரைக்கிறாய். ஞானிகள் பலவாறு உன்னைத் துதித்துப் புகழ்ந்தாலும், அவர்களிடம் பேசாது மௌனம் பாராட்டுகிறாய். ஆயர்பாடியிலுள்ள தாஸிகள் போன்ற ஸ்திரீகளுக்குப் பணிந்து தொண்டு செய்கிறாய்; கடுந்தவம்புரிந்து, இந்திரியாதிகளை யடக்கி உன்னைப் பஜிக்கும் யோகிகள் விஷயத்தில் எஜமானனாகவாவது இருந்து அனுக்கிரகிக்கிறதில்லை. இதனால் நான் தெரிந்துகொண்டது என்னவென்றால், உனது அழகிய பாதகமலங்கள் பக்தி விச்வாஸம் முதலியவற்றால் அசையாமலிருக்குந் தன்மையுள்ளன என்பதே." பகவான் கோகுலத்தில் இடையர்களுடன் கூடி விளையாடி, கோபிகளை அனுக்கிரகித்துக் கிருதார்த்தர்களாய்ச் செய்தருளியதற்குக் காரணமான அவரது ஸௌலப்பாதி கல்யாண குணங்களை, நிந்தாஸ்துதிரூபமாய் லீலாசுகர் வெளியிட்டிருக்கிறார்.

(88) அவதாரா: ஸந்த்வன்யே
ஸரஸிஜ நயனஸ்ய ஸர்வதோ பத்ரா: |
க்ருஷ்ணாதன்ய: கோ வா
ப்ரபவதி கோகோப கோபிகாமுக்த்யை ||

"திருமால் லோகோபகாரமாக எடுத்துள்ள புண்ணிய அவதாரங்கள் பல உள; எனினும், ஒரே காலத்தில் பசுக்கள், கோபாலர்கள், கோபஸ்திரீகள் முதலானோர் நற்கதி பெறும்படி செய்தற்கு, காரவண்ணனான ஸ்ரீ கிருஷ்ணனைத்தவிர வேறு எவரால் முடியும்?" எல்லா அவதாரங்களைக்காட்டிலும், ஸ்ரீ கிருஷ்ணவதாரம் ஸௌலப்யம் முதலிய குணங்களால் மிக்க பெருமை வாய்ந்தது என்றும், கார்வண்ண ரூபியான திருமாலைத் தியானித்து எல்லோரும் எளிதில் மோக்ஷ ஸாம்ராஜ்ய மடையலாமென்றும் கருத்து.

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய் நின்றது மன்னவன் கோல்.

மின்சாரப் பிரவாகம்

CURRENT ELECTRICITY

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சாரியார், பி.ஏ., எல்.டி.]

முன் ஸஞ்சிகையில் பௌதிக மாறுதலால் மின்சாரப் பிரவாகம் உண்டாக்குவதற்காக, வால்டா என்னும் வித்துவான் முதன் முதல் கண்டுபிடித்துள்ள மின்சார பாண்டத்தின் அமைப்பும், செயலும் கூறப்பட்டதுடன், தடையின்றி சலிக்குமாறு, மத்தியில் தாங்கி நிறுத்தப்பட்டுள்ள ஒரு காந்த ஊசிக்குச் சமீபத்தில் மின்சாரப் பிரவாகம் சென்றால், இதன் விசைத்தாக்கத்தால் காந்த ஊசியானது தனது சுபாவிக நிலையைவிட்டு அசைந்தாடி, கடைசியில் வடக்குக்குக் கிழக்கிலோ மேற்கிலோ ஒரு ஸ்தானத்தில் நிலைபெற்று நிற்குமென்று தக்க பரீக்ஷணங்களைக் கொண்டு காண்பிக்கக் கூடுமென்றும் சொலலப்பட்டது. மின்சாரப் பிரவாகத்தின் திசைக்கும், அளவுக்கும், காந்த ஊசியின் (வடநுனியுடைய) சலன திசைக்கும், பரிமாணத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. மின்சாரப் பிரவாக சம்பந்தமான பரீக்ஷணங்களுக்கும் காரியங்களுக்கும் மேற்கூறிய சம்பந்தமே முக்கிய ஆதாரமானது. ஆகையால் இதை நன்கறிந்து கொள்ளல் அவசியம். இதற்குரிய பரீக்ஷணங்களைக் காந்த ஊசியைக்கொண்டும், மின்சார பாண்டத்தைக் கொண்டும் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் மேற்கண்டுள்ள குறிப்பு விஷயங்களைப் பரீக்ஷண ரூபமாய் ஸ்திரப்படுத்திக்கொள்ளலாம்.

பரீக்ஷணம், 5

மின்சாரப் பிரவாகத்தின் திசை	காந்த ஊசியின் வட நுனி சலிக்கும் திக்கு
1. ஊசிக்கு மேல (a) வடக்கிலிருந்து தெற்கு	கிழக்கு நோக்கி
(b) தெ............வ	மேற்கு ,,
(c) கி......மே அல்லது மே...கி	சலனம் தோன்றாது.
2. ,, கீழாக (a) வ...தெ	மேற்கு நோக்கி
(b) தெ..........வ	கிழக்கு ,,
(c) கி..........மே மே...........கி	சலனம் இராது
3. வட நுனிக்கு எதிரில்	
(a) கீழ் மேலாக	கிழக்கு நோக்கி
(b) மேல் கீழாக	மேற்கு ,,
4. தென் நுனிக்கு எதிரில் (a) கீழ் மேலாக	மேற்கு ,,
(b) மேல் கீழாக	கிழக்கு ,,

கவனிப்பு :—மேற்கூறிய பரீக்ஷணங்களில் மின்சார பாண்டத்திலுள்ள துத்தநாகத்தகடு, தாமிரத்தகடு இவற்றில் பொருத்தப்பட்டுள்ள செப்புக் கம்பிகளைச் சரிவரப் பிடித்து, காந்த ஊசிக்கு மேலோ, கீழோ, எதிரிலோ, குறிப்பிட்ட திக்கில் மின்சார சக்தி பிரவகிக்கும்படி செய்து பார்க்கவேண்டும்.

மேற்கூறிய சம்பந்தத்தை எளிதிலறிவதற்காகச் சுலபமான விதிகள் உண்டு. இவற்றுள் ஆம்பியர் என்னும் வித்துவான் கண்டுபிடித்துக் கூறியுள்ள விதி (Ampere's Rule) முக்கியமானது:—"பரீக்ஷித்தறிய விரும்புவோன், தனது முகத்தை காந்த ஊசியை நோக்கும்படி வைத்துக்கொண்டு, மின்சாரப் பிரவாகம் செல்லும் திசையில், தான் நீந்திச் செல்வதாய்ப் பாவித்துக்கொண்டால், காந்த ஊசியின் வட நுனியானது அவனது இடது கைப்பக்கம் நோக்கிச் சலிக்கும்." இவ்வாறு, காந்த ஊசிக்குமேல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மின்சார சக்தி பிரவகித்தால், பரீக்ஷகன் தன் முகம் கீழிலுள்ள ஊசியை நோக்கியும், தனது தலை தெற்குப் புறமாயும், கால் வடக்கிலுமிருக்குமாறு நீந்துவதாய் வைத்துக்கொண்டால், அவனது இடது கை கிழக்கு நோக்கி இருக்கும். ஆகையால் ஊசியின் வடநுனியும் கிழக்கு முகமாகச் சலிக்க ஆரம்பித்து, கடைசியில் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே ஒரு ஸ்தானத்தில வந்து நிற்கும். இவ்வாறே மற்ற இடங்களிலும் பார்த்து, ஆம்பியர் விதியின் யதார்த்தத்தைக் கண்டறியலாம்.

இச்சம்பந்தத்தை மற்றொரு சுலபமான விதியைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம். "உனது வலது கையின் உள்ளங்கை (palm) காந்த ஊசியை நோக்கியிருக்குமாறும், நான்கு விரல்கள் மின்சாரப் பிரவாக திக்கைக் குறிக்குமாறும் வைத்துக் கொண்டால், (மற்றைய விரல்களிலிருந்து) வெளிப்புறமாய்ப் பரப்பி நிறுத்தப்பட்ட பெருவிரல்

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன னடிதழீஇ நிற்கு முலகு.

(Thumb) குறிக்கும் திக்கை நோக்கிச் சாந்த ஊசியின் வட நுனி சலிக்கும்."

(1) கவனிப்பு:-மேற்கூறிய விதிகளை யனுசரித்து, காந்த ஊசிக்கு மேலோ கீழோ, மின்சாரப் பிரவாகமானது கிழக்கு மேற்காகவோ, அல்லது மேற்கு கிழக்காகவோ செல்லும்படி செய்தால், ஊசியின் வடநுனி வடக்கிலோ அல்லது தெற்கிலோ அசையும்படி ஏற்படும். ஆனால், அந்த ஊசியானது மத்தியில் தாங்கி நிறுத்தப் பெற்று, மின்சார விசைத்தாக்கம் உண்டாவதற்கு முன்னம் வடக்குத் தெற்காக நிற்கும் தன்மையுடையதாதலால், மின்சார சக்தியால் அதில் ஏற்படக்கூடிய சலனம் தடைப் பட்டு, ஊசி சலனமற்றதாய்த் தோன்றும். இவ்வித சந்தர்ப்பங்களில் காந்த ஊசியின் சலனம் காணப்படாவிட்டால், அதன்மீது கிழக்கு மேற்காக (அதாவது, அதன் சுபாவிக நிலைமைக்கு நேர் கோணக்குறுக்காக (at right angles to its N. S. Position) பிடிக்கப்பட்டுள்ள கம்பியில் மின்சாரப் பிரவாகமில்லை யென்று ஊஹிக்கக் கூடாது. மின்சாரப் பிரவாக விசைத்தாக்கமிருந்தும், ஊசியைத் தாங்கி நிற்கும் ஆதாரமானது அதைச் சலிக்கவொட்டாமல் தடைபண்ணுவதாய்க் கொள்ளவேண்டும்.

மின்சார சக்தி எந்தத் திக்கில் பிரவகித்தாலும், அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு காந்த ஊசியின் மீது ஏற்படும் விசைத்தாக்கமானது, ஊசியை மேற்கண்ட திக்குக்கு நேர்கோணமான திசையில் நிற்கும்படி தள்ளும் சுபாவமுள்ளது. தெற்குவடக்காக நிற்கும்படி செய்யும் ஊசியின் இயல்பான சக்தியினுடையவும், அதன்மீது தாக்கும் மேற்கூறிய மின்சார சக்தியினுடையவும் பலாபலத்துக்குத் தக்கவாறு, ஊசியின் வடநுனி அசைந்தாடிக் கடைசியில் வடக்கு - கிழக்கு, அல்லது வடக்கு—மேற்கு இவற்றிற்கு இடையே ஒரு ஸ்தானத்தில் வந்து நிற்கும். ஊசியின் இயல்பான சக்தியும், மின்சார சக்தியும் அதைத் தெற்கு வடக்காகவே காட்டி நிற்கும்படி செய்யும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டால், மின்சாரப் பிரவாகமிருந்தும், ஊசியின் சலனம் கண்ணுக்குப் புலப்படாது.

2. காந்த ஊசி தனது நிலைமையிலிருந்து சலித்து நிற்கும் அளவானது, மின்சாரப் பிரவாகத்தின் பிரமாணத்தையும், அதற்கும் ஊசிக்கு முள்ள தூரத்தையும் பொறுத்திருக்கிறது. பிரவாகம் ஜாஸ்தியானாலும், அல்லது ஊசிக்கு நிரம்ப சமீபத்தில் ஏற்பட்டாலும், ஊசியின் சலன அளவு அதிகரிக்கும்; பிரவாகம் குறைந்தாலும், அல்லது ஊசிக்குத் தூரத்திலிருந்தாலும், அது குறைவுபடும். மேலும், ஊசிக்கு மேலேயோ, கீழிலோ, அல்லது நுனிகளுக்கு எதிரிலோ ஏதாவது ஒரு புறத்தில் மட்டில் மின்சார சக்தி பிரவகிக்கும்படி செய்வதாலுண்டாகும் சலனமானது, அதே பிரவாகம் மேற் கண்ட ஊசியைச் சுற்றி உண்டாகும்படி செய்தக்கால், வெகு ஜாஸ்தியாய்க் காணப்படும். மின்சாரப் பிரவாகமடங்கியுள்ள கம்பியை, ஊசியைச் சுற்றி நிற்குமாறு மடக்கிப் பிடித்தால், ஊசியின் சலனம் அதிகமாவதைப் பரீக்ஷணரூபமாய்க் காணலாம். அதே கம்பியை, ஊசியைப் பலதரம் சுற்றிவருமாறு மடித்துப் பிடித்தால், சலன அளவு முன்னிலும் அதிகமாகக் காணப்படும். மின்சாரப்பிரவாகப் பரிமாணத்தை அளவிடுவதற்கு ஆதாரமாயுள்ள மேற்கூறிய தத்துவங்கள் நன்றாய்க் கவனிக்கத்தக்கவை.

3. மின்சாரப் பிரவாகத்திற்கும், அதன் தாக்கத்தால் ஏற்படும் காந்த ஊசியின் சலனப் பரிமாணத்திற்குமுரிய பலவித சம்பந்தத்தை எளிதில் கண்டறிவதற்காக, ஓர்ஸ்டேட் என்பவர் கண்டுபிடித்து உபயோகப்படுத்திய கருவி ஒன்றுண்டு.

ஓர்ஸ்டேட் கருவியின் (Oersted's apparatus) அமைப்பும், அதை உபயோகப் படுத்தும் விதமும் சுலபமானவை.

அமைப்பு:-சரியாகத் தாங்கி நிறுத்தப்பட்ட ஒரு காந்தஊசியைச் சுற்றிலும், ஆனால் அதன் மீது சம்பந்தப் படாமலும் இருக்குமாறு, ஒரு கனமான பித்தளைக்கம்பி வளைத்து நிறுத்தப் பட்டிருக்கிறது. அக்கம்பியின் இருநுனிகளிலும் உலோகத்தால் செய்யப்பட்ட சிறு கிண்ணங்கள் (Cups) பொறுத்தப்பட்டிருக்கின்றன. வேண்டும்போது அவற்றில் பாதரசத்தை ஊற்றி நிரப்பிக்கொள்ளலாம். மின்சாரப் பாண்டக் கம்பிகளின் தனி நுனிகளை, ஒரு கிண்ணத்தில் ஒன்றாகத் தோய்த்தால், அப்போது மின்சாரப் பிரவாகமானது மேற்கூறிய கனமான பித்தளைக்கம்பி வழியாக காந்த ஊசியைச் சுற்றிச்செல்லும்

248369

மேற்கண்ட கருவியை உபயோகப்படுத்தும் விதம் :—ஒரு சமதரையில், இக்கருவியை வைத்து, காந்தஊசி சலனமற்று, தெற்கு வடக்காகத் தனது இயல்பான நிலைமையில் நிற்கும்போது, மேற்கண்ட பித்தளைக் கம்பியானது ஊசிக்கு மேலும் கீழும் சமமாக (Parallel) இருக்கும்படி வைக்கவேண்டும். மின்சாரப் பாண்டத்தின் தாமிரத்தகட்டில் பொறுத்தப்பட்ட கம்பியின் தனி நுனியை ஒரு கிண்ணத்திலுள்ள பாதரசத்திலும், துத்தநாகத் தகட்டில் சம்பந்தப்பட்டுள்ள கம்பியின் நுனியை மற்றொரு கிண்ணத்திலும் நன்கு தோய்க்கவேண்டும். மின்சாரப் பாண்டத்திலிருந்து ஒரு கிண்ணத்திற்கும், அதிலிருந்து பித்தளைக் கம்பி வழியே மற்றொரு கிண்ணத்திற்கும், அப்பால் மின்சாரப் பாண்டத்திற்கும் பிரவகிக்கும் மின்சார சக்தியின் சலனதிக்கை (Direction of Current) மின்சாரப் பாண்டக் கம்பிகளைக் கிண்ணங்களில் தோய்த்திருக்கும் ரீதியைக் கொண்டு கண்டறியலாம். பிறகு, பிரவாகம் ஊசிக்கு மேலும், கீழும், நுனிகள் எதிரிலும் எந்தத் திக்குகளில் இருக்கிறதென்று பார்த்து, இதற்கும் காந்த ஊசியின் சலன திக்குக்குமுள்ள சம்பந்தத்தைப் பரீக்ஷணத்தால் ஸ்திரப்படுத்தவும், கம்பி நுனிகளை மேற்கண்ட கிண்ணங்களில் மாற்றித் தோய்த்தால், ஊசியைச் சுற்றிலுமுள்ள மின்சாரப் பிரவாக திசையும் மாறுபடும் ; இதனால், ஊசியின் சலனமும் முன்னிருந்ததைக் காட்டிலும் வேறு திக்கில் காணப்படும்.

இக்கருவியின் பித்தளைக் கம்பியானது காந்த ஊசிக்கு நேர்கோணக் குறுக்காக இருக்குமாறு வைத்து, மின்சாரப் பாண்டத்தின் கம்பி நுனிகளை கிண்ணங்களிலுள்ள பாதரசத்தில் தோய்த்தால், ஊசி சற்றும் சலிக்காமல் இருக்கும். பித்தளைக் கம்பியை ஊசிக்குச் சமமாய் வைத்து, ஒரே கிண்ணத்தில் இரண்டு கம்பிநுனிகளை அமிழ்த்தினாலும், ஊசியின் சலனம் ஏற்படாது. இதன் காரணம், பித்தளைக்கம்பி வழியே மின்சார சக்தி பிரவகிக்காமல், ஒரு கம்பி நுனியிலிருந்து பாதரச மூலமாய் மற்றொரு கம்பி முனைக்குச் சென்று, மின்சாரப்பாண்டத்திற்குத் திரும்பிவிடுகிறதுதான். அதாவது, பித்தளைக் கம்பியானது மின்சாரப் பிரவாக வெளிச் சுற்றுமார்க்கத்தின் ஒருபாகமாக ஏற்படுவதில்லை.

ஈசுவர ஸ்வரூபம்

ISWARA

உலகில் காணப்படும் பல பொருள்களைப் படைத்து, அவ்வெல்லாப் பொருள்களுக்கும் மேலானதாகிய பொருள் ஒன்று அவசியம் இருக்கவேண்டுமெனல் எல்லோருடைய கொள்கைகளுக்கும் ஒத்துவருவது. ஆயினும், அப்பொருள் எத்தகையது ? அதை ஒரு பெயரா லழைப்பது சரியா ? அது ஒரு பதார்த்தமா ? குணமா ? உருவுடையதா ? அருவமா ? என்னும் இத்தகைய கேள்விகள் பல தோன்றுகின்றன. ஆதலால் ஈசன் என்ற பொருள் ஒன்று இருப்பதால் அதை நாம் அறிய முயல்வது மிகவும் முக்கியமே.

“ஈசன் என்ற பொருளே இல்லை” என்று சொல்லுவோர்க்கு ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யரால் கூறப்படும் விடையே பொருத்தமானதாகும். அஃது என்னவெனில், ஏதேனும் ஒரு பொருள் இருக்கிறதெனக் கூறின், அது பின்னர் இல்லை எனச் சொல்லுதல் தகும்; எவன், ‘ஈசன் இல்லை’ என்கிறானோ அவன், ஈசன் என்பதொன்று இருக்கிறது, அஃது இல்லை எனவே கூறுகின்றேன் என்கிறான். ஆதலால் அவனும் மனத்தில் அஃது இருக்கின்றது என நினைத்தே வெளியில் அஃது இல்லை எனக் கூற முயல்கின்றான். “ஒவ்வொருவருடைய ஆத்மஸ்வரூபமாயும் விளங்கும் பரமேசுவரனை இல்லை எனத் தீர்மானிப்பதற்கு எவன் ‘நான் சமர்த்தன் ; ஈசன் இல்லை’ என்று சொல்லுகிறானோ அவனே ஆத்மஸ்வரூபமாவான்” என்று சங்கரர் கூறியிருக்கின்றனர்.

நாஸ்திகருட் சிலர் ஈசன் என்னும் பொருளே இல்லை ; உலகங்களெல்லாம் இயற்கையாகவே உண்டாகின்றன என்று கூறுவர். அவர்களுடன் நமக்கு விரோதமில்லை. ஏனெனில், அவர்கள் எதை இயற்கை எனக் கூறுகின்றனரோ அதையே நாம் தெய்வமென்று கொண்டாடுகின்றோம்.

எவை எங்ஙனமிருப்பினும், ஈசனென நாம் கொண்டாடும் பெரிய பொருளின் உண்மைக் குணாதிசயங்களையோ வடிவ வேறுபாடுகளையோ தெரிந்து கொள்ளுதல் நம் முதல் கடமையாகும். ஏனெனில், ஈசனைப்பற்றிப் பல வேதங்களிலும் புராணங்களிலும் பற்

பல மதத்தினராலும் பல்வேறு அபிப்பிராயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. நம் மதத்திலேயே பல பிரிவுகள் இருக்கின்றன. அப்பகுப்புக்களை நிறுவியவர் எல்லோரும் நன்குணர்ந்த ஞானியர். ஆதலால் அவர்கள் கருத்துக்களை நாம் தெரிந்து கொள்வதனால் சரியான முடிவுக்கு வருவோம். அவற்றுட் சிலவற்றை யாம் இங்கு கூறுதல் தகும்.

சாங்கியர் என்போர், ‘உலகம் அசைவற்றது; ஈசன் உலகுடன் சம்பந்தமின்றித் தனித்து நிற்பன்’ எனக்கூறுவர்.

சைனரோ வெனின், ‘எங்கும் நிறைந்தோனும் எஞ்ஞான்றும் இருப்போனும் பின்னமற்றவனுமான ஒருவனே ஈசன்’ என்பர்.

கன்மம் துக்கம் முதலிய தொடர்பு அற்று, கேவலம் ஞானமே உருவாக எல்லாவற்றையும் அறிந்திருப்பவனே ஈசன் எனப் பதஞ்சலியை முற்கோண் டொழுகுவோர் கூறுவர்.

தார்க்கிகர், சாமானியமான ஒரு ஆன்மாவால், இத்தகைய சிருட்டியைச் செய்ய மனத்தாலும் எண்ணமுடியாது. ஆதலால் இவற்றை எல்லாம் படைத்தவர் ஒருவர், ஞானவானாகவும் ஜீவர்களினும் வேறானவராகவும் இருத்தல் வேண்டும்; அவரே ஈசன்" என்பர்.

பாஞ்சராத்திரிகள், வாசுதேவரே எல்லாவுலகங்களுக்கும் காரணர்; அவரிடமிருந்து சங்கர்ஷணனென்னும் பெயர் கொண்ட ஜீவன் உண்டாகிறது. அந்த வாசுதேவனே ஈசன் எனக் கூறுவர்.

கன்ம மீமாம்ஸர், எப்பொருளாயிருப்பினும், பரமாணுவிலும் எல்லா விசேஷங்களையும் பொருத்தி உபாசித்தலே அறிதற்கு வழியாம் என்றும், நாம் சுமத்தும் விசேஷங்களையெல்லாம் அமைத்துக் கொண்டுள்ள பிரமம் என்பது கிடையாதென்றும் கூறுவர்.

யுக்திக்கும் எட்டாததெனவும், வேதத்தாலேயே அறியக்கூடியதெனவும், ஒருவித குணமற்றும் எல்லா குணமுமுடையது எனவும், எங்கும் நிறைந்தது எனவும், வேதமானது ஈசனது உண்மையை விவரிக்கிறது.

இத்தகைய அபிப்பிராய பேதங்கள் நிறைந்திருக்கும் சமயத்தில் நாம் எப்படி ஈசனது நிஜமாகிய ஸ்வரூபத்தை நிர்ணயிக்கற் பாலது எனக்கூறுவது இயல்பே. எனினும், நம் முன்னோர்களெல்லோரும் நஹ்யநிந்ததி என்ற சுருதிவாக்கைச் சிரமேற்கொண்டு, மும்மூர்த்தமாகக் கூறப்பட்டுள்ள பிரானை, ஒரு மூர்த்தத்தையே உயர்வெனக்கொண்டு தற்காலத்திற் போல பிற மூர்த்தங்களை இழித்துத் தூஷணை செய்தாரல்லர். அவர்களுக்குப் பெரும்பாலும் யோகமுதலிய மார்க்கங்களினால் எம்பிரானைத் தெரிந்துகொள்ளக்கூடிய சக்தியும் இருந்தது. ஆதலின் இவ்விடம் கூறியுள்ள ஒரு அபிப்பிராயத்தையும் கூடத் தப்பெனக் கூறுதல் மதியீனமேயாகும். ஆயின் எல்லாவிதக் கிளைஞர்களும் சாற்றிய விதமே ஈசனிருக்கிறாரோ எனில் அதுவும் தவறாகும். ஏனெனில், அவைகளெல்லாம் ஒரே வஸ்துவுக்குப் பொருந்தாது.

எவ்விதமெனில், ஓரிடத்தில் ஈசன் கர்ம மற்றவரென்றும், மற்றோரிடத்தில் அவர் பூவுலகைச் சிருட்டித்தாரென்றும் சொல்வது ஒவ்வாது. கர்மமற்றவருக்குச் சிருஷ்டியெனும் கர்மமாவது, ஸ்திதி, சம்ஹாரம் எனும் செயல்களாவது எப்படிப் பொருந்தும்? ஆயின் அவர் செய்யவில்லையா? ஈசனாலல்லவோ இத்தரணியில் தோன்றியவை உண்டாக்கப் பட்டன எனின் அதுவும் சரியே. பகுத்து வித்தியாசமாகக் கூறப்பட்டுள்ளதற்குக் காரணங்கள் பல உள்ளன. முதலாவது காரணமென்னவெனின், நன்குணர்ந்த அறிஞர்களுள் அவரவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக்கொண்டு அவரவர்கள் அபிப்பிராயங்களைக் கூறுகின்றனர். பெரிய ஒருவஸ்துவை அநேகர் பார்க்கின்றார்களென வைத்துக்கொள்வோம். அருகிலிருப்பவனுக்குத் தெரிந்த அவ்வளவு விவரமாகத் தூரத்திலிருப்பவனுக்கு அவ்வுருவம் தெரிவதில்லை. மேலும் ஒவ்வொருவனும் ஒரு பாகத்தையே நன்கு கண்ணுற்றிருப்பானாகில் அவன் அதைப் பற்றியே சரிவரக் கூறச் சக்தியுள்ளவனாகின்றான். மேலும் எல்லாக் குணங்களும் ஒரே இடத்தில் பொருந்தியிருப்பின், ஒவ்வொருவன் ஒவ்வொரு குணத்தைப்பற்றி வர்ணித்தால், மற்றக் குணங்களெல்லாம் அவ்விடத்தில் பொலியவில்லையெனல் பொருந்தாது அல்லவா? ஆயின் அபிப்பிராய பேதங்களைக் கொண்டு நாம் ஒருவரை ஒருவர் தூஷித்துக் கொள்வது தவறாகமுடியும். அன்றியும் ஈசனைக் குறித்து, அநாதி, மகாதீதமானது, ஏகம், நித்தியம், நிஷ்களம், சச்சிதானந்தம் என வேதமுறைத்துள்ளவைகளைப் பின்பற்றி அனைவருக்

இறைகாக்கும் வையகமெல்லா மவனை முறைகாக்கு முட்டாச் செயின்.

கும் கூறின் அவர்கள் மனம் அவ்விதப் பரம் பொருளை எளிதில் தெரிந்துகொள்ள முடியாது அல்லல்படும். ஆதலின், மனவாக்கா லறியமுடியாப்பரமனைக் குணபூதராகச்சொல்லி மனிதர்கள் மனதிற்கு எளிதில் புரியும்படி செய்து வைத்திருக்கிறார்கள். இவ்விதம் சொன்னால் நிஷ்களங்கமாகிய வஸ்துவைத் தாழ்த்திக் கூறுதலாகாதோ எனின், ஆகாது. இவ்விதம் கூறுவதும் வேத இயல்பே. ஏனெனில், உண்மையாகிய பிரமஸ்வரூபம் முன்னர் கூறியுள்ள இலக்கணங்கள் பொருந்தி யிருப்பினும், அது மாயையினால் உபாதான காரணமாயும், நிமித்த காரணமாயும் நிற்கின்றது. அதுவே உபாதிவசத்தினால் ப்ரும்மா, விஷ்ணு, ருத்திரன் என்கிற பேதத்தை யடைகிறது. அந்த மாயைக்கு ஸத்வம் ரஜஸ், தமஸ் என்கிற குணங்களுண்டு. அவைகளோடு கூடினவராயும், ஸ்ரேஷ்டராயு மிருக்கிறவரே ஈசுவரனெனப்படுவர். குணபேதத்தால் ப்ரும்மா, விஷ்ணு, ருத்திரர் என நம்மால் நாமம் ஈயப்பட்டு நிற்கின்றார். இதற்கு ஈண்டு ஒரு உதாரணம் கூறுதல் நன்கு விளங்கச்செய்யும். ஒருவித வர்ணமுமில்லாத ஸ்படிகத்தினருகில் சிவப்பு மலரை வைப்பின் அந்த ஸ்படிகம் சிவப்பு நிறமாக இருக்கிறது. அப்பொழுது அதைப் பார்ப்பவன் இந்த ஸ்படிகம் சிவப்பு வர்ணமுடைத்தெனல் இயல்பே. பின்பு அம்மலரை அப்புறப்படுத்தி மஞ்சள் மலர் ஒன்றை அந்த ஸ்படிகத்தினருகில் வைத்தால் ஸ்படிகம் மஞ்சளா யிருக்குமல்லவா? அதை யொருவன் பார்த்து, 'ஆஹா! நம்மிடம் சிவப்பெனப் பொய் சொன்னானல்லவா? ஸ்படிகம் மஞ்சள் வர்ணமே' எனக்கூறின், ஸ்படிகத்திற்கு வர்ணமேயில்லை யெனத் தெரிந்தவர்களுக்கு மிகவும் ஏளனமாக இருக்குமல்லவா? அம்மாதிரியே இருக்கின்றது ஈசுவரனைக் குறித்துச் சொல்லும் அபிப்பிராய பேதங்களும்.

உபாதியற்றப் பரப்ரும்மத்தின் அடையாளங்களையே வேதங்கள் உரைக்கின்றன. ஆயின் வெவ்வேறு ரூபங்களும் அவயவங்களும் ஈசுவரனுக்கு ஏற்படுவானேன்? மூன்று கண்களையுடைய சிவனும், பன்னிரு கைகளை யுடைய குமரனும், யானைமுகத்தவனாகிய விநாயகரும், பாம்பணையில் படுத்த விஷ்ணுவும் ஈசனல்லவோ? இப்படி அவருக்கு மனுஷ்ய உருவத்தைக் கொடுப்பது சரியோ எனின், இவைகளுக் கெல்லாம் சரியான காரணங்களை வைத்தே அமைத்திருக்கின்றனர். அளவிறந்த பொருளை நம் மனம் கொஞ்சமேனும் நன்கு உணரும்படிக்கும், நம்மறிவிற்கு எட்டும்படிக்கும், உபாசிப்பதற்குச் சுலபமாயிருக்கும் உருவத்துடன் நம் மனதைச் சுலபமாக நிறுத்துவதற்கு ஹேதுவாய், அநேக மூர்த்திகளைப் பெரியோர் உண்டாக்கியிருக்கின்றனர்.

இங்கு பரப்ரும்மத்தின் உருவத்தை நாம் சொல்லவேண்டுவது, அநேக பெரியோர் வார்த்தைகளாலேயே உரைத்தல் கூடும். 'மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும், குறையிலா அளவினாலுங் கூறொணாதாகி நின்ற இறைவனார்' எனக் கூறியுள்ளனர். மேலும், அவனருளே கண்ணாகக் காணினல்லால்-இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவன் இறைவனென்றெழுதிக் காட்டொணாதே' என்பதையும் காண இன்ன தன்மையனென்றறிய முடியாததோ ஈசுவரன் எனல் ஒவ்வும். அருவமோ ரூபாரூபமானதோ வன்றி நின்ற- உருவமோ உரைக்குங் கர்த்தாவடிவெனக் குணர்த்திங் கென்னில்-அருவமும் ரூபாரூபமானதும் அன்றி நின்ற-உருவமும் மூன்றும் சொன்னவொருவனுக் குள்ளதாமே!" எனவும் ஆன்றோர் மொழிந்துள்ளார். இங்ஙனம் உலகுயிர்கள் உய்யுமாறு அநேக ரூபங்களைக் கொண்ட ஈசன் உண்மை உருவம் எல்லாமா யிருப்பினும் அல்லதாகும். மனோவாக்குக் கெட்டாத அப்பெருமான், "பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ள மதியின் பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல" என்னும் இலக்ஷண முடையார் என்பதே சர்வசாத்திர சம்மதமாகும். இதுவே ஈசனாரின் உண்மை நிலை.

(221-ம் பக்கத் தொடர்ச்சி.)

செய்து, தனது ஐசுவரியங்களை யெல்லாம் சாஸ்திரப் பிரகாரம் தானஞ் செய்தான். 'மேகங்கள் மழை பெய்வதற்காகவே ஜலங்களை ஆவியாகக் கிரகிப்பதுபோல் பெரியோர்கள் நன்கொடை செய்யும் பொருட்டே திரவியார்ஜ்ஜனம் செய்கிறார்கள்." சொந்த உபயோகத்திற்காக மாத்திரம், தனம் சம்பாதிப்பது ஒரு இழிகுணமாகும் என்பது கருத்து.

"தென்னிந்திய நாகரிகத்திற்கும் இலக்கியத்திற்கும் தமிழ்ப் பாஷை புரிந்த உதவிகள்"

"CONTRIBUTION OF TAMIL TO THE CIVILISATION AND LITERATURE OF SOUTH INDIA"

தமிழ்

(2)வர்த்தகம் அல்லது வணிக மேம்பாடு :- (Trade & Commerce) தமிழ்நாட்டில் தொன்றுட்களில் வர்த்தகம் அதிகமாக நடைபெற்று வந்ததென்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் பல உள. தமிழ்நாடானது ரோமர்களுக்கும் (Romans), கிரேக்கர்களுக்கும் (Greeks) நன்கு தெரிந்திருந்தது மன்றி, அவர்கள் இங்கு வந்து வியாபாரஞ் செய்தார்க ளென்பதற்கு, 1806-ம் வருடத்தில் கருவூரில் (ஆனிலே) கண்டெடுக்கப்பட்ட அகஸ்டஸ் (Augustus), டைபீரியஸ் (Tiberius), கிளாடியஸ் (Claudius) முதலியோர்களது நாணயங்கள் ஒரு சாட்சியாகும். இஃதன்றி, தாலமி (Ptolemy) என்பவர் கூறியுள்ள டேபில் (Table) களாலும் இது நன்கு புலப்படும்.

(*N. B.*) The following is by Sir. M. E. Grant Duff in the "*Contemporary Review*" of September 1891. "There is a coin in the Madura Museum, the finding of which was one of the most interesting epigrams of events with which I am acquainted. It is none other than the *Aureus of Claudius* which was struck to commemorate the conquest of Britain and it was found in the Madura District. I myself possess a coin of the *Arian Emperor Valeus* which was found in the Vaigai River of the same district."

மேலும் தமிழ்நாட்டார் அராபியர்கள் (Arabs) பாரசீகர்கள் (Persians) ஜாவானியர்கள் (Javanese) முதலிய இதர நாட்டாரோடு வியாபாரஞ் செய்து வந்தனர் என்று நூற்களில் கூறியுள்ளது. முசரி என்னும் பட்டினமானது அந்நிய தேசங்களுடன் 'ஏற்றுமதி' 'இறக்குமதி' சம்பந்தம்பெற்றுப் பழைய காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. மேலும் அநேக துறைமுகங்கள் இந்நாட்டின்கண் இருந்ததாக நமக்குத் தெரியவருகின்றபடியால், அந்நிய நாட்டாரோடு தமிழ்நாட்டார் வர்த்தகஞ் செய்துவந்தன ரென்பதில் ஓர் ஐயப்பாடுமுண்டோ ?

(3) ராஜரீகம்:—(Government) பண்டைக் காலத்து அரசாட்சி முறையைச் சற்று நாம் ஊன்றிப் பார்ப்போமேயாயின் அது எத்தகைய மேம்பாடுடையது என்பது நமக்குத் தெரியவரும். (இதை இலக்கிய விஷயமாய் யாம் கூறுவதில் கண்டுகொள்ளலாம்.)

நகர சீர்திருத்தம் :—(Town Planning) வெகு நாட்களுக்கு முன்னமே நம் நாட்டில் நகரங்கள் நன்ருய்ச் சீர்திருத்தப்பட்டுவந்தனவென்பதை,

> "மாட மதுரையும், பீடா ருறந்தையும்
> கலிகெழு வஞ்சியும், ஒலிபுனற் புகாரும்"

என்பதால் அறியலாம்.

நகரமாந்தர்க்கு யாதொரு பிணியும் வாராமலிருக்கும் பொருட்டுத் துரைத்தனத்தார் ஆறு குளங்களிலுள்ள ஜலத்தைச் சுத்தப்படுத்தியும், தற்காலத்தில் (Drainage System) என்று கூறப்படும் 'ஊரங்கண நீரை' கோட்டைகளின் மதிலேச்சுற்றியுள்ள கால்வாய்களில் Conduits) தூம்புகள் என்று சொல்லப்படுகின்ற நீர்க்குழல்கள் மூலமாய்க் கொணர்ந்து சேர்த்தனர். இல்லங்களிலும், இன்னுமிதர இடங்களிலும் உள்ள அசுத்த ஜலமானது இக்கால்வாய்களில் கொண்டுவந்து விடப்பட்டது.

துரைத்தனமுறை :— (Method of Administration) மன்னர்கள் தங்களா லியன்றமட்டில் குடிகளுக்கு யாதொரு குறையும் வாராமல், மனு நெறி வழுவாது 'அஞ்சு பயந்தீர்த்து' அரசாண்டு வந்தனர்.

(Army and Navy):— நாட்டின்கண் கடல் வழியாகவும், தரைவழியாகவும் பகைவர் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கேற்ற கப்பற் படையும், தரைப்படையு மிருந்தன. இதற்கு உதாரணமாக, பரணர் ஐந்தாம்பத்தில் பாடிய சேரனது வீரச்செயல்கள் அத்தாட்சியாகும். இச் சேரன் கடலில் சேனைகளைச் செலுத்தி பழையன் என்பவனை யழித்தான். அல்லாமல் கடலை யாணுகக்கொண்டு இடர் விளைத்த பகையரசர்மீது எண்ணிறந்த மரக்கலங்களுடன் (Ships) படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றனன். இதனுல் செயற்கரிய

கடற்போரொன்று செங்குட்டுவனால் நிகழ்த்தப்பட்டமை தெரியவரும்.

"நெடுங்கட லோட்டி, உடன்றுமேல் வந்தவாரிய
மன்னரைக் கடுபுனற் கங்கைப் பேர் யாற்று வென்
[றேய்',
"சேரமான் கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன்"
"கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்"

எனப் புகழப்பட் டிருத்தலால் விளங்கும்.

ஐம்பெருங் குழு:—(The Five Great Assemblies). அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் (ஒற்றர்) (Spies) இவர்களன்றிக் கருமவினைஞர், கணக்கியல் வினைஞர், தரும வினைஞர், தந்திர வினைஞர், பெருங்கணி என்று அரசியல் வகிக்குந் தலைவரு மிருந்தனர்.

கருமவினைஞர்:— தேசத்தின் ஆட்சியை நடத்துபவர் (i.e., Modern Public Works Department).

கணக்கியல் வினைஞர்:— தேசத்தின் வரி வருவாய்களைக் கவனிக்கும் அதிகாரிகள் (i.e., Modern Revenue Department).

தருமவினைஞர்:— நாட்டின் அறங்களைப் பாதுகாப்போர் (i. e., Judges, Judiciary).

தந்திர வினைஞர்:—படைகளின் சம்பந்தமான தலைமை வகிப்போர் (Home & Foreign Secretaries).

பெருங்கணி:—(Meteorologist) அரசனது காரியங்கட் குரிய காலங்களையும், நிமித்தங்களையும் கணித்துரைப்போன். இவரெல்லாம் அரசனது மந்திராலோசனைக் குரியவராவர்.

இஃதன்றி, கரணத்தியல்வர் (கணக்கர்) கருமவிதிகள் (ஆணைநிறைவேற்றுமதிகாரிகள்) கனகச்சுற்றம் (பண்டாரம் வகிப்போர்) (i.e., Chancellor of the Exchequer), கடைகாப்பாளர் (அரண்மனைக்காவலர்), நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என எண் பேராயத்தார்களு மிருந்தனர். அரசனது திருமுகங்களை யெழுத 'கண்ணெழுத்தாளரும்' இருந்தனர். "கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன், மண்ணுடை முடங்கலம் மன்னவர்க்களித்து" என்பதைக் காண்க (சிலப். 26. ll 170–1.) சில குறிப்பிட்ட தினங்களில் அரசியும், அரசனுடன் ஆதனத்தமர்ந்து தன்னபிப்பிராயத்தைத் தடையின்றி வெளியிடுவாள்.

வரி அல்லது இறைகள்:—(Taxes) விடியற்காலங்களில் இறைகள் பண்டாரங்களில் சேர்க்கப்பட்டன. இறை கொணர்வதற்கு அரண்மனையுள் முரசம் அறையப்படும். இது, "ஞாலங் காவலர் நாட்டிறை பயிருங்காலை முரசம் கடை முகத் தெழுதலும்" என்பதால் விளங்கும். இறைகள் இருவகைப்படும். அவை: (1) நெல்லாயம் (In kind) (2) காசாயம் (in cash)

(1) நெல்லாயத்தின் கீழ்:—பாடிகாவல், சில்வரி, எடுத்துக்கொட்டி, அரிமுக்கை என இவை யடங்கியிருந்தன.

(2) காசாயத்தின் கீழ்:—கார்த்திகை யரிசி, கார்த்திகைக் காசு, கார்த்திகைப் பச்சை, வேலிப் பயிர், நீர் நிலக்காசு, தறியிறை, கடையிறை, காலகத்தப்பாட்டம், தட்டாரப்பாட்டம், ஆசுவக்கடமை, செக்குக்கடமை, ஏரிமீன் காசு, இருவரி பட்டோலைக் காசு என இவை அடங்கியிருந்தன.

பெருநாள் அல்லது பெருமங்கலம்:—(King's Birthday) இது வருடந்தோறும் குடிகளால் ஒரு புண்ணிய தினமாகக் கருதப்படும். இதை அவர்கள் கொண்டாடுவார்கள். அக்காலத்தில் அரசன் உயிர்களிடம் கருணை காட்டி மங்கலமாகிய வெள்ளணி யணிந்து சிறைப்பட்டவரை விடுவித்தும், இரவலர்க்கும், புலவர்க்கும் வேண்டியவித மளித்தும், சேனை வீரர்களைக் கௌரவித்தும் வந்தனன். "சிறந்தநாளணி செற்ற நீக்கிப், பிறந்த நாள் வயிற பெருமங்கலமும்" என்று தொல்காப்பியனார் கூறியுள்ளார். அச்சமயத்தில் ஜனங்கள் பலரும் அரசனுக்குக் காணிக்கை செலுத்துவர்.

தற்காலத்தில் போரில் வீரச்செயல்கள் புரிந்தவர்க்குப் பட்டமும், பதக்கமும் (Victoria Cross) கொடுப்பதைப் போல், பழைய காலத்திலும், யுத்தத்தில் வெற்றியடைந்த பின்னர் விழுப்புண்பட்டு இறவாதிருந்த வீரர்களையும் வீரசொர்க்கம் பெற்ற சூரர்களது மைந்தர்களையும், அரசன் தன் ஆஸ்தானத்தில் வரவழைத்து அவர்களை யெல்லாம் அபிமானித்து ஊக்குதல் பழையமரபா யிருந்தது (i.e., modern 'pension'). போரில் இறந்த வீரர்க்கு வீரக்கல் என்ற நடுகல் நாட்டி அவர்களைக் கௌரவிக்கும் முறை தொல்காப்பியம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

(4) கல்வி:—(Education) பூர்வீக அரசர்கள் மிகவும் படிப்பாளிகளாயிருந்து, பல நூல்

களையுஞ் செய்திருக்கின்றனர். இதனல் அவர்கள் கல்வியை மிகவும் போற்றி வந்தமை தெரிகின்றது. (உ-ம்) சங்கங்களும், அவற்றின் அங்கத்தினர்களான புலவர்களும், புரவலர்களும் கவனிக்கற்பாலன (Kings patronised poets, (e.g.) பாணர், சாத்தனர் முதலியோர். செல்வக்கடுங்கோ என்னும் சேரன் தன் முன் பாடிய கபிலருக்கு நூறுயிரங்காணமும், நன்று என்னுங் குன்றின்மேல் (சேரனும், கபிலரும்) ஏறி அரசன் தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் புலவர் பெருமானுக்குக் காட்டி அப் புலவர்க்களித்தான். இவ்வருங் கொடையை "நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன் பெற்ற ஊரினும் பலவே" என்பதால் காணலாம். அன்றியும், பெருஞ் சேரலிரும் பொறை, அரிசில்கிழார் என்பவருக்குத் "தன் கோயிலுள்ளன வெல்லாங் கொள்க" என்று ஒன்பது நூறுயிரங் காணத்தோடு தன் அரசு கட்டிலையுங் கொடுத்தான். மேலும், பாணருக்குச் சேர ராசன் உம்பற் காடு என்னுஞ் சேரநாட்டுப் பகுதியின் அரசிறை வருவாயையும் தன் மகன் குட்டுவன் சேரலனையும் பரிசாக அளித்ததாகத் தெரிகிறது. இவற்றல் தமிழ் நாட்டில் கல்விச் செருக்கு எத்தன்மைத்தா யிருந்ததென்று யாவர்க்கும் எளிதில் புலப்படும்.

(5) கலைகள்—சிற்பங்கள் (Fine Arts and Architecture) தற்காலத்தில் வழங்கும் நாகரிக வித்தைகள் முதலியன தமிழ்நாட்டில் ஆதிகாலந்தொட்டே மிகச் சிறப்பாயிருந்தன. அஃதன்றி, பெயின்டிங் (Painting) என்னும் சித்திரம் வரைதலு மிருந்தது. அதைப்பற்றிய நூலாகிய ஓவியநூல் ஒன்றிருந்ததாகவுந் தெரிகின்றது.

ஸ்ரீரங்கம், தஞ்சை முதலிய இடங்களிலுள்ள கோயில்களின் சிற்ப வேலைப்பாடுகள் ஐரோப்பிய சிற்பிகள் பலராலும் பாராட்டப்படுகின்றன. மேல் கட்டிடங்களைத் (Superstructure) தூண்கள் தாங்கும்படிக் கட்டுவது தென்னிந்திய வழக்கங்களில் ஒன்று. இம்மாதிரியான வேலைப்பாடுகளை வேலூர், சிதம்பரம், திரிச்சிராப்பள்ளி, மதுரை, ராமேசுவரம் முதலிய தென்னிந்திய கோயில்களில் காணலாம். மேலும் மதுரையிலுள்ள திருமலை நாயகரது மஹால் (Tirumalai Naik Mahal) ஒன்றே இதற்குப் பெருத்த அறிகுறியாகும். கிழியாலுங் கிடையாலும் விலங்கு, பூ, பூங்கொத்து, வாடாமாலை, பொய்க்கொண்டை முதலியன அமைக்கும் கைத்தொழிலாளர் பலர் இருந்தனர். சிற்பாசாரிகளும், சித்திராகாரிகளும் பலரிருந்தனர்.

Wood Carving :—மரத்தில் சித்திரங்களைச் செதுக்கிப் புகழ் பெற்றிருந்தனர் பலர். (Sculptors) இதன் விவரத்தை (Arts & Crafts of India and Ceylon, by A. K. Coomaraswamy & Elements of Hindu Iconography) முதலிய புத்தகங்களில் கண்டு கொள்ளலாம். இச்சிற்பாசாரிகளின் வேலைப்பாடுகளை இவர்கள் செதுக்கிய சிலைகளின் தோற்றத்தினல் தெரிந்துகொள்ளலாம். இச்சிலைகள் (உண்மையான) உயிருள்ளனவைப் போல் தோன்றுகின்றன. (Life-like appearance of the Statues). மணிகளாலும், முத்துக்களாலும் நிரம்பிய பல வேலைப்பாடுகளுமிருந்தன.

(6) மதம் நீதிநூல்:—(Religion & Ethics) தமிழ் நாட்டில் பல நீதி நூல்கள் இருந்தனவென்பதற்குத் திருக்குறள் ஒன்றே போதுமானது. பல மதத்தார்க்கும் பயன்படும் பல அரியவிஷயங்கள் அதன்கண் கிடைக்கும்.

தமிழ்நாட் டரசர்களும், குடிகளும் பெரும்பாலும் சைவர்களா யிருந்தபடியால் சிவபிரானிடம் மிகுந்த பக்தி வாய்ந்திருந்தனர். விஷ்ணுவையும் போற்றிவந்தனர். இவர்களது மதக்கொள்கை, "செஞ்சடைவானவன் அருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்", "ஆனேறுயர்த்தோன் அருளினில் விளங்க மாநிலம் விளங்கிய மன்னவன்" என்பவற்றல் விளங்கும். ஆயினும் தமிழ்நாட் டரசர்கள் பிற்காலத்தரசர்களைப்போல் மதாந்தரங்களில் வெறுப்புக் காட்டுதலின்றித் தங்கள் காலத்தில் வழங்கிய எல்லாச் சமயங்களிலும் அன்புவைத்து அவற்றை ஆதரித்து வந்தனர். வைதிகரும், சைனரும், ஆசீவகரும், பௌத்தரும் தம்மிற் கலந்து வாழ்ந்து வந்தனர். இவ்வாறே பிற்காலத்துத் தமிழரசரும் மதாந்தரங்களில் அபிமானித்து இருக்குஞ் செய்தியை சாசனங்களா லறியலாம். முதலாம் இராஜ ராஜச் சோழன் முதலியோர்கள் சைவாபிமானம் மிக்கவர்களாயினும், சைந, பௌத்த மதங்களை யபிமானித்து வந்தவர்க ளென்பது அவர்கள் சாசனங்களால் தெரிகின்றது. வைதிகச் சார்புக்

கேற்ப, பிராமணரைப் பெரிதும் ஆதரித்து அவர்கள் உறுதிமொழிப்படி ஒழுகி வந்தனர். (2-ம் மாடலனும், செங்குட்டுவனும்). இவர்கள் க்ஷத்ரிய வகுப்பினராதலால் அவ்வகுப்பினுக்குரிய யாகாதிகளை அந்தணரைக் கொண்டு செய்துவந்ததும், பிராமணர்களையும் அவர் தர்மங்களையும் பெரிதும் போற்றிவந்தமையும் அறியத்தக்கன. (cf. சிலப். 28, 175-194)

மேலும் :—

> "மறக் கடை முடித்தவாய வாட்குட்டுவன்
> வடதிசை மருங்கின், மறைகாதோம்பினர்
> தடவுயத்தீ வியாத்தன் பெருவாழ்க்கைக்
> காற்றா தாளரைப் போற்றிக் காமின்"

என்பதாலும் விளங்கும்.

இலக்கியம் : (Literature)

- தமிழ்ப்பாஷை
  - இலக்கணம் (Grammar)
  - இலக்கியம் (Literature)
    - இயல் / வழக்கு
      - நாடக வழக்கு
      - உலகியல் வழக்கு
    - இசை.
    - நாடகம்.
    - சங்கங்கள் மூன்று
      - தலை: 1449 அங்கத்தினர்.
      - இடை: 3700 அங்கத்தினர் 59-தலைவர்கள்.
      - கடை: 49-அங்கத்தினர் 3-அரசர்கள்.

தமிழ் இலக்கியத்திற்கு மூலமாயுள்ளது சங்க நூற்களேயாகும். சங்கம் என்றால் பல புலவர்கள் அடங்கிய ஒரு சபை. இது மேலே காட்டப்பட்டுள்ள மூன்று பிரிவுகளைக் கொண்டது. தமிழரசர்கள் பலர் இவற்றில் அங்கத்தினராய் இருந்ததுமன்றி மிகுந்த சிரத்தையும் எடுத்துவந்தனர்.

இனி இச்சங்கங்களுக் குரிய நூல்களை அவைகளது முறைப்படிச் சற்றுக்கூறுவோம்.

தலைச்சங்கம் .—

(1) பெருங்குருகு
(2) பெருநாரை

} இவைகளிரண்டும் இசைத் தமிழ் நூல்கள். அடியார்க்கு நல்லார் காலத்தில் இறந்து போயின. அரிய விஷயங்கள் கொண்டவை.

இடைச்சங்கம் :—

(1) வெண்டாளி (இடைச்சங்கத்தாரியற்றிய நூல்களில் ஒன்று.

(2) இசைநுணுக்கம் (வெண்பாவால் இயற்றப்பட்ட இசைத் தமிழ் நூல்).

(3) தோல்காப்பியம் :—

இஃது அகத்திய முனிவரது மாணுக்கர் பன்னிருவருள் ஒருவரும், இடைச்சங்கப் புலவர்களில் ஒருவருமாகிய தோல்காப்பிய முனிவரால் அருளிச் செய்யப்பட்டது. இது இயற்றமிழ் இலக்கண நூலாகும். தனித்தனியே ஒன்பது ஒன்பது இயல்களையுடைய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களை யுடையது. 1612 சூத்திரங்கள் கொண்டது. இடைச்சங்கத்தார்க்கும், கடைச்சங்கத்தார்க்கும் நூலாக இருந்து விளங்கியது.

கடைச்சங்கம் :—இதற்குரிய நூல்கள் எட்டுத் தோகையாகும். அவை முறையே, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றுள் கடையிலுள்ள இரண்டு நூல்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம் :—

அகநானூறு :—இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 401 அகவற்பாக்களை யுடையது. இதைத் தொகுத்தவர் மதுரை உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன் என்னு மந்தணர். இதைத் தொகுப்பித்தவன் பாண்டியன் கானப் பேர் எயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி.

இது பண்டைக்காலத்து இத்தமிழ் நாட்டுள்ள மக்களினியல்பு, வழக்கு, நாகரிகம், மணமுறை இவற்றை யறிதற்குச் சாதனமாயிருப்பதுடன், அக்காலத்து அரசர் பெருமை, கொடை, வீரம், நீதிமுறைமை, நாடு, ஊர், மலை, ஆறு, காடு, கடற்றுறை முதலிய பலவற்றையும், வள்ளல்கள், புலவர்கள் இவர்களுடைய புகழ், பெருமிதம் இவற்றையும் நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது.

அச்வத்த ப்ரதக்ஷிணம்.—மக்கட்பேற்றை விரும்பும் ஸதிரீகள் கொண்டாடும் ஒரு விருதம். நதிக்கரையிலேனும் குளக்கரையிலேனும் வேம்பைத் தழுவிய அரச மரத்தை 108 அல்லது 1008 தரம் பிரதக்ஷிணம் செய்வது இதன் கிரமம்.

ஞானசௌந்தரி

அல்லது

சுபாங்கியின் சுயம்வரம்

[ஸ்ரீமான் ஐ. சுந்தரம் அவர்கள், பி. ஏ., பி. எல்.,]

இருபத்தேழாவது அதிகாரம்

ஒரு ஜோஸ்யம்

சௌரியப்பன் புறப்பட்டுப் போனபின் சில நிமிஷங்கள் ஞானசௌந்தரியும் மகாதேவனும் மோட்டார் ஸைகிள் உடைந்த இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார்கள்; பிறகு பல்லாவரத்தைப் பார்க்கத் திரும்பினார்கள். இரயிலில் டிக்கட்டுகள் வாங்குவதற்குத் தன்னிடம் பணமில்லை என்பது அப்போதுதான் மகாதேவனுக்கு நினைவு வந்தது. ஞானசௌந்தரியைப் பார்த்து, "ஞானம்! இங்கிருந்து சென்னைக்கு டிக்கட்டு கட்டணம் எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டான். அவன் அப்படிக் கேட்டதன் ரகஸ்யத்தை அறிந்துகொண்ட ஞானசௌந்தரி, "ஏன் உம்மிடம் காசில்லைபோல் தோன்றுகிறது. என்னிடமும் இல்லை" என்றாள். பிறகு என்ன செய்வது என்று தோன்றாமல் மகாதேவன் யோசித்துக் கொண்டே நின்றான். ஞானசௌந்தரி, "வேறு யோசனைகள் செய்வதில் பயன் ஒன்றுமில்லை. கால் நடையாகத் திரும்பவேண்டியதுதான்" என்றாள். வேறு வழியொன்றுமில்லை யென்பதை அறிந்த மகாதேவனும் அதற்கு இசைந்தான். இருவரும் சாலையில் திரும்பி சென்னையைப் பார்க்க நடந்தார்கள்.

மகாதேவன் :— "பணமுள்ளவர்களுடன் கூட வருவதானால் மோட்டார் சவாரி; என்னைப் போன்ற பரம தரித்திரனோடு வருவதானால் கால் நடையைத் தவிர வேறு வழியில்லை" என்றான்.

ஞானசௌந்தரி :—"உமக்கே தெரிந்ததா பணத்தின் பெருமை! ஞானிகள் செல்வத்தை வெறுக்கையென்று இழித்துப் பேசுவதெல்லாம் அவர்களுக்குச் செல்வம் புளிப்பு திராக்ஷையாக இருப்பதை உத்தேசித்துத் தானோ?" என்றாள்.

மகாதேவன் :— "எனக்கு செல்வத்தின் குணமும் பெருமையும் தெரிவது ஒரு பொருளல்ல. உனக்கு அது நன்றாகத் தெரிந்திருப்பதுதான் எனக்கு ஒருபுறம் சந்தோஷமானாலும் ஒருபுறம் விசனமாயிருக்கிறது."

ஞான:—"செல்வத்தின் குணத்தைப்பற்றி நான் என்ன அறிந்திருப்பதாக நினைத்திருக்கிறீர்?"

மகா:—"செல்வவந்தர்கள் சிநேகம் இருந்தால் மோட்டார் சவாரி கிடைக்கும் என்பது தெரிந்திருக்கிறதல்லவா?"

ஞான :—"தெரிந்திருக்கிறது. வேறு ஒன்றும் தெரிந்திருக்கிறது."

மகா :—"என்ன அது?"

ஞான :—"யோசித்துச் சொல்லுமே."

மகா:—"இன்றைய தினம் எனக்கு யோசிக்கும் சக்தி குறைந்திருக்கிறது. நீயே சொல்."

ஞான :—"செல்வவந்தர்கள் சிநேகத்தால் மோட்டார்சவாரியும் கிடைக்கும். ஏழைகளின் சிநேகத்தால் கால் நடைக்குக் குறைவில்லை."

மகா :—"அப்புறம்?"

ஞான :—"செல்வவந்தர்கள் நேசத்தையும் மோட்டார் சவாரியையும் நம்பினால் வழியில் அவ்வண்டி ஏதாவது மரத்தில் மோதியோ வேறு விதமான ஆபத்து நேர்ந்தோ எலும்புகள் முறியக்கூடிய ஸ்திதிக்கு வந்துவிடும். ஏழைகள் நேசத்தை நம்பினால் கால் நடையும் தேகசிரமமும் ஏற்பட்டாலும் பெரிய விபத்து ஒன்றுமே நேர்ந்துவிடாது"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டே போகையில் வானம் கறுத்து காற்றுவீசி மழைபொழிய ஆரம்பித்தது. சூரியன் பாதி அஸ்தமித்துவிட்டது. இருள் மூடவில்லை. மழையோ பலக்குமென்று பட்டது. பத்து மைல்வரை நடக்கவேண்டியதாக இருந்தது. சாலைப்பக்கத்தில் ஒதுப்புறமாக ஒரு சிறு நாலுகால் மண்டபம் காணப்பட்டது. மழைபெய்து ஓயும்வரை அந்த மண்டபத்தில் தங்க உத்தேசித்து இருவரும் அங்கே சென்று உட்கார்ந்தார்கள். அக்கம்பக்கத்தில் மனிதர் ஒருவருமேயில்லை. மழையும் பலக்க ஆரம்பித்தது.

மகாதேவன்:—"முன்னெல்லாம் என்னோடு பேசுவதில் உனக்குத் திருப்தியிருந்தது. இப்போது உனக்குத் திருப்தி யுண்டாகும்படி பேச எனக்குத் தெரியவில்லை" என்றான்.

ஞானசௌந்தரி :—"எனக்குத் திருப்தியாகப் பேசத் தெரியாவிட்டால் அதனால்

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ னாடொறு நாடு கெடும்.

என்ன? உலகத்தில் அதைவிட வேறு உயர்ந்த இலக்ஷியம் இல்லையா?"

மகாதேவன் :—"எனக்கு அதைக்காட்டிலும் உயர்ந்த இலக்ஷியம் ஒன்றுமில்லை. ஆனால் உனக்கோ என் பேச்சு வேம்பாகிவிட்டது போல் இருக்கிறது."

ஞானசௌந்தரி :—"அப்படியா?"

மகாதேவன் :—"மிஸ்டர் சௌரியப்பா பேசுவதுபோல் பேசினால்தான் உனக்குத் திருப்தி."

ஞானசௌந்தரி :—"ஆனால் அப்படிப் பேசுமே."

மகாதேவன் :—"சௌரியப்பன் உன்னோடு தனித்திருக்கும் காலங்களில் என்னென்ன பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசுகிறான் என்பது எனக்குத் தெரியவில்லையே."

ஞானசௌந்தரி:—"நான் சொல்லட்டுமா?"

மகாதேவன்:—"சொல்லேன்."

ஞானசௌந்தரி :—"பூட்ஸ்கள் எத்தனை விதம் இருக்கின்றன வென்பது, அவைகளின் விசேஷங்கள், தொப்பியின் மாதிரிகள் முதலான மிகப்பெரிய விஷயங்களைப்பற்றி அவர் மணிக்கணக்காகப் பேசுவார்."

இதைக்கேட்டதும் மகாதேவன் சிரித்தான். ஞானசௌந்தரியும் சிரித்தாள்.

மகாதேவன்:—"இவைகளெல்லாம் கற்றுவந்து நான் பேசுவதானால் முடியாத காரியம்."

ஞானசௌந்தரி:—"சௌரியப்பா பேசும் மாதிரியாகப் பேசுவதாகச் சொன்னீரே. கற்று வருகிறதுதானே."

மகாதேவன்:—"கற்கவேண்டியதுதான்."

ஞான :—"எதற்காக?"

மகாதேவன் :—"உன்னைத் திருப்தி செய்வதற்காகத்தான். அதுதான் முன்னமேயே சொன்னேனே."

ஞான :—"ஆம். ஆம். உமது தீர்மானம் எனக்கு பூட்சுகளையும் தொப்பிகளையும் பற்றிப் பேசுவதுதான் பிரியம் என்பதல்லவோ?"

மகா :—"அவ்விதம் தீர்மானிக்க இடமிருந்ததால் தீர்மானித்தேன்."

ஞான :—"சரி. அந்தத் தீர்மானத்தைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். நீர் இந்தப் புது விஷயங்களையெல்லாம் யாரிடம் கற்றுக் கொள்ளப் போகிறீர்?"

மகா :—"அதுதான் தெரியவில்லை நீயே சொல்லிக்கொடேன். கற்றுக்கொண்ட பிறகு உன்னுடன் அதெல்லாம் பேசலாம்."

ஞான:—"அதெல்லாம் சாவகாசமாக ஆகட்டும். நான் கற்றுக்கொடுப்பதானால் அதற்கு நீர் என்ன தருவீர்?"

மகா :—"நீ சொன்னால் சொன்னபடி செய்கிறேன்."

ஞான :—"ஸரி. ஒரு பாட்டுப் பாடும். கேட்டு வெகு நாளாயிற்று."

மகா :—"பாட்டா? பாட்டுப்பாட இது சரியான சமயமல்ல."

ஞான :—"எப்போது சரியான சமயம்? ஜோஸ்யம் சொல்லுமே. உமக்குத்தான் ஜோஸ்யம் தெரியுமே."

மகா :—"எனக்கு ஜோஸ்யம் தெரியாதே."

ஞான:—"முன் ஒருநாள் ஏதோ எனக்குக் கூட ஜோஸ்யம் சொல்வதாகச் சொன்னீரே. நான் ஜோஸ்யம் ஒரு மூட நம்பிக்கை என்று சொல்லிப் பரிகஸித்தேனே? ஞாபகமில்லையா?"

மகா :—"ஞானம்! முன் நாட்கள் ஞாபகத்தை நினைக்க நினைக்க, ஏதோ இப்போ அதெல்லாம் மாறிவிட்டதாகத் தோன்றுகிறதே. ஏன் அப்படித் தோன்றும்படி செய்கிறாய்?"

ஞான:—"நான் ஒன்றும் செய்யவில்லையே. நீராக மனதில் என்னென்னவோ நினைத்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தால் அதற்கு நான் என்ன செய்யக்கூடும்?"

மகா :—"அப்படியா! ஆனால் சிறிது நேரமாவது நாம் முன்னே இருந்ததுபோல் இருக்கலாமே. அப்படியிருக்கக்கூடிய காலம் எப்போது வருமோ!"

ஞான :—"நீர்தான் ஜோஸ்யம் சொல்லுமே."

மகா :—"அதுதான் நான் சொன்னேனே. எனக்கு ஜோஸ்யம் தெரியாது."

ஞான : —"ஆனால் என்ன தெரியும்? குறி சொல்லத் தெரியுமோ!"

மகா :—"அதுவும் தெரியாது. ரேகைசாஸ்திரம் கொஞ்சம் தெரியும்"

ஞான :—"அப்படியானால் என் கைரேகைகளைப் பார்த்து எனக்கு ஒரு ஜோஸ்யம் சொல்வீரா?"

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச் சூழாது செய்யு மரசு.

மகா:—"சொல்லுகிறேன். ஆனால் ஜோஸ்யத்திற்கு தக்ஷிணை கொடுக்கவேண்டுமே."

ஞான:—"இது வேண்டுமே அது வேண்டுமே என்று சொல்லிக் கொண்டிருப்பதால் ஒன்றும் கிடைக்காது. ஜோஸ்யம் சொல்லும்; சாமர்த்திய முண்டானால் தக்ஷிணை பெற்றுக் கொள்ளும்."

மகா:—"சரி. என்ன ஜோஸ்யம் சொல்ல வேண்டும்?"

ஞான:—"எனக்கு எப்போது தமிழில் நல்ல தேர்ச்சியுண்டாகும் என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்" என்று சொல்லி வலது கையை நீட்டினாள்.

மகாதேவன் ஞானசௌந்தரியின் வலது கையைத் தன் இருகைகளிலும் எடுத்து உள்ளங் கையைப் பார்த்தான். பிறகு இருட்டு வந்து விட்டதால் ரேகைகள் நன்றாகத் தெரியவில்லை என்று சொல்லித் தன் கண்களுக்கு சமீபத்தில் கொண்டுபோனான்.

ஞான:—"சொல்லுமே. என் இத்தனை நேரம்? கெட்டிக்கார ஜோஸ்யருக்கு ஒரு க்ஷணம் போதாதா?" என்றாள்.

மகா:—"தமிழறிவைக் காட்டும் ரேகை நடுமத்தியில் இருக்கிறது. நான் முதலில் என் ஜோஸ்ய தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு விட்டு மேல் சொல்லுகிறேன்" என்று சொல்லி ஞானசௌந்தரியின் உள்ளங்கையைத் தன் இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு பிறகு அதை ஒரு முத்தமிட்டான்.

ஞானசௌந்தரி:— (கையைப் பின்னால் இழுத்துக்கொண்டு) "போதும், உமது ஜோஸ்யம் வேண்டவே வேண்டாம்" என்றாள்.

"உன் இஷ்டம்" என்றான் மகாதேவன்.

ஞான:—"சரி. ஒருபாட்டுப் பாடுங்களேன். இந்த சமயம் பாடலுக்கேற்றது" என்றாள்.

மகாதேவன்:—

* "மாங்குயில னையதீஞ் சொல்
 வடுவகிர் பொருவும் வேற்கட்
பூங்கொடி வதுவை கேட்டுப்
 புவியினில் வேந்தரெல்லாந்
தேங்கமழ் தெரியல் வீமன்
 திருநக ரிறுத்த றன்று
லாங்கவர் தேயம் யாவு மரும்
 பொறை யுயிர்த்த வன்றே"

என்ற செய்யுளை இசையுடன் பாடினான். பாடி முடிந்ததும் மகாதேவன், "முன் காலத்தில் பெண்கள் சுயம்வரம் செய்துகொள்ளும் வழக்கமிருந்தது. இப்பொழுதோ எல்லாம் மாறிப்போய்விட்டது" என்றான்.

ஞான:—"மாறினதில் ஆண் மக்களுக்கு லாபந்தானே?"

மகா:—"ஆண் மக்களுக்கு என்ன லாபம்? பெண்மக்களுக்குத்தான் என்ன லாபம்"

ஞான:—"சுயம்வரம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்தால் ஆண்மக்கள் எல்லாரும் சுயம்வரத்திற்குச் சென்று வரிசையாக அமர்ந்திருந்து பெண் யாரை மாலையிடுகிறாளோ என்று கவலையோடு கவனித்துக் கொண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு சமயம் யாரை யாவது மாலையிட்டாலும் மாலையிட்ட புருஷன் பெண்ணை அழைத்துப்போக விடாமல் மற்றவர்கள் அவனைச் சண்டைக் கிழுப்பார்கள். இப்பொழுதோ ஆண்மக்கள் அந்த சிரமம் ஒன்றுமில்லாமல் பெண்ணின் பெற்றோர்களிடமிருந்து பணத்தையும் தண்டிக்கொண்டு பெண்ணையும் பெறுகிறார்கள்."

மகா:—"ஆனால் முன் காலத்தில் சுயம்வரம் செய்யும் வழக்கம் இருந்தாலும் ஒவ்வொரு சமயங்களில் ஏதாவது காரணததால் பெண்ணின் மனதிற் கிசைந்த புருஷன் சுயம்வர மண்டபத்திற்கே வாராமல் இருக்க நேரிடும்."

ஞான:—"நேர்ந்தால்தான் என்ன? அந்தக் காலத்துப் புருஷர்கள் வீரர்கள். ஒருவருக்கு ஒரு பெண்ணிடம் அன்பு ஏற்பட்டு அவளும் அவரிடம் அன்புபூண்டிருப்பது தெரிந்தால் சுயம்வரத்திற்கு அழைக்கப் படாவிட்டாலும், பெண்ணை எப்படியும் அவர் அடைந்துவிடுவார். சம்யுக்தை சுயம்வரத்தின்போது பிருதிவி மகாராஜா அழைக்கப்படாதிருந்தும் சமயத்தில் வந்து சம்யுக்தையைக் குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டு சென்றாரல்லவா?"

மகா:—"அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். இந்தக் காலத்தில் பெண்கள் சுயம்வரம் செய்து கொள்ளாமலிருப்பது எனக்கு மொத்தத்தில் சந்தோஷந்தான்."

ஞான:—"உமக்கு சந்தோஷத்திற்கென்ன? சுயம்வரம் செய்துகொள்ளும் வழக்கம் அநுஷ்டானத்திலிருந்தால் உம்மை ஒருவரும் மாலையிட மாட்டார்களென்பது உமக்கே

* நைடதம் சுயம்வரப் படலம் 12-வது செய்யுள்.

தெரிந்திருக்கிறதோ? இப்போதோ பணத்துடன் உமக்கு எங்காவது பெண் கிடைக்கும்.''

மகா :—''என் சமாசாரம் எப்படியாவது இருக்கட்டும். சுயம்வரம் செய்துகொள்ளும் வழக்கம் இப்போது அனுஷ்டானத்தில் இருந்தால் நீ யாரை மாலையிடுவாய் ?''

ஞான:—''யாரை மாலையிடுவே னென்பது சொல்லமுடியாது. உம்மை மாலையிட மாட்டேன் என்பதை மட்டும் நிச்சயமாய்ச் சொல்வேன்.''

மகா :—''சௌரியப்பனை மாலையிடுவாயா?''

ஞான:—''நான் சுயம்வரம் செய்துகொள்ளும்போது சௌரியப்பனை மாலையிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளும். அப்போது நீர் என்ன செய்வீர் ?''

மகா :—''பிருதிவிமகாராஜா சம்யுக்தையைத் தூக்கிச் சென்றதுபோல் நான் உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவேன்.''

ஞான:—''உமது தைரியமெல்லாம் வாய்ப் பேச்சில்தானென்பதுஎனக்குத் தெரியாதா?''

மகா :—''வாய்ப் பேச்சா, உண்மையா என்பதை நீ சுயம்வரம் செய்து கொள்ளும் போதுதான் பாரேன்.''

ஞான :—''இன்றுமுதல் மூன்று வருஷம் முடிந்ததும் நான் சுயம்வரம் செய்துகொள்ளத்தான் போகிறேன். அப்போது உமது சௌரியத்தைப் பார்க்கலாமே.''

மகா :—''மூன்று வருஷங்களுக்குப் பின் ஆனாலும் சரி, முப்பது வருஷங்களுப்பின் ஆனாலும் சரி, நீ மட்டும் சுயம்வரம் செய்வதானால் நான் சொன்னபடி செய்கிறேனா இல்லையா என்பதை நீ பார்ப்பாய்.''

ஞான:—''நான் சொல்லும் ஜோஸ்யம் பலிக்கிறதா இல்லையா என்பதையும் நீர் பாரும். நான் மூன்று வருஷம் முடிந்ததும், சுயம்வரம் செய்யுமுன்பாக நீர் உமது ஜாதியில் ஒரு குழந்தையை 'விவாக ஸம்ஸ்காரம்' செய்து கொண்டிருப்பீர். உமது மாமனார் சொத்தில் எவ்வளவு பறிக்க முடியுமோ அவ்வளவையும் பறித்துவிடுவீர்.''

மகா:—''நீ என்னதான் சொல்லு. நான் ஒரு நாளும் அப்படியெல்லாம் செய்யமாட்டேன்.''

ஞான :—''இது உண்மைதானா ?''

மகா :—''நீ ஒரு ஜோஸ்யம் சொன்னாய். என் ஜோஸ்யத்தையும் கேள். நீ சுயம்வரம் செய்யும்போது நான் எங்கே இருந்தாலும் சரி, வந்துவிடுகிறேன். நீ எனக்கு மாலையிட்டால் சரி. வேறு யாரையாவது மாலையிட்டால் உன்னை இப்படித் தூக்கிக்கொண்டே போய் விடுவேன்'' என்று சொல்லி அவளை மெதுவாகத் தூக்கித் தானும் எழுந்தான்.

அதற்குள் மழையும் நின்றுபோய் விட்டது. இருவரும் சென்னையைப் பார்க்க நடந்தார்கள்.

ஞானசௌந்தரியின் வார்த்தைகளின் உள் கருத்தென்ன என்பது மகாதேவனுக்குப் புலப்படவில்லை. பேச்சுவாக்கில் சாதுர்யமாய்ப் பேசிக்கொண்டே போய்விட்டான். ஆனால் ஞானசௌந்தரி சொன்ன வார்த்தைகளுக்கு ஏதோ உள் கருத்து இருக்கிறது என்று புலப்படவில்லை. இருவரும் கால் நடையாகப் பேசிக்கொண்டே போனார்கள். முதலில் சிறிதுநேரம் முன்போலவே பரிகாசமாயும், வேடிக்கையாகவும் பேசினார்கள். ஆனால் வழி முழுவதும் வேடிக்கைப் பேச்சே பேசுவது முடியாதல்லவா ? அப்போதுதான் முதன் முதலாக ஞானசௌந்தரி சில குடும்ப இரகசியங்களை மகாதேவனிடம் பிரஸ்தாபித்தாள். அவள் தகப்பனார் தேவ ஆசீர்வாதம் உத்தியோகஞ்செய்து சம்பாதித்துவரும் வரும்படியைத்தவிர வேறு வரும்படி ஒன்றுமே அக்குடும்பத்துக்குக் கிடையாது. தேவ ஆசீர்வாதத்தின் மாதச் சம்பளமோ அவர் குடும்பச் செலவுக்குத்தான் சரியாக இருந்தது. அருளானந்தமும், ஞானசௌந்தரியும் தேவ ஆசீர்வாதம் காலத்திற்குப் பிறகு அவரிடமிருந்து அடையக்கூடிய சொத்து ஒன்றுமே இல்லை. இருவரும் கல்விகற்று சம்பாதித்துத்தான் காலம் நடத்தவேண்டும். இந்தவிஷயத்தை ஞானசௌந்தரி மகாதேவனிடம் சொன்னாள். சௌரியப்பன் வரவை தேவ ஆசீர்வாதம் சந்தோஷமாக ஆதரிப்பதன் கருத்து அப்போதுதான் மகாதேவனுக்குப் புலப்பட்டது. அவன் நல்ல பணக்காரனாதலால் அவனை மணப்பது ஞானசௌந்தரிக்கு நன்மையாகவிருக்குமென்பது தேவ ஆசீர்வாதத்தின் கருத்து என்பது தெரிந்தது. அதைப்பற்றித் தன் கருத்தை ஞானசௌந்தரி ஜாடையாகக் காண்பித்தாள். மூன்று வருஷ காலம் சென்றபின் தனக்கு வயது முதிர்ந்து சுதந்திரம்

கிடைத்துவிடுமென்றும் அதுவரை தான் கல்யாணம் செய்துகொள்வதைப்பற்றி யோசிக்கப் போவதேயில்லையென்றும் சொன்னாள். தானே ஒரு தொழில்செய்து தனக்கு வேண்டியதை சம்பாதித்துக் கொள்வதுதான் தன் விருப்பம் என்பதையும் சொன்னாள்.

மகாதேவன் :—“என்ன தொழில் செய்து சம்பாதிப்பாய் ?”

ஞான :—“நீங்கள் செய்யக் கூடிய தொழில்களில் ஏதாவது ஒன்று நான் செய்ய முடியாதா ?”

மகா :—“பெண்கள் வேலைசெய்து சம்பாதிப்பது சரியல்ல.”

ஞான :—“அதுதான் ஆண்மக்கள் சேர்ந்து செய்திருக்கும் தீர்மானம் என்பது எனக்குத் தெரியும். இருக்கட்டும். நான் என்ன செய்தால் சரியானதென்பது உமது அபிப்பிராயம் ?”

மகா:—“அதுதான் சொல்லியிருக்கிறேனே. நீ சுயம்வரம் செய்யும்போது நான் உன்னைத் தூக்கி வந்துவிடுவேன். பிறகு இருவரும் பாட்டுகளைப் பாடிக்கொண்டே காலம் போக்குவோம். இந்த முழுமூட உலகத்தின் சம்பாத்தியக் கவலைகளை மறந்தே போய்விடுவோம்.”

ஞான:—“என் ஜோஸ்யம் பலிக்கிறதா இல்லையா பாருமே.”

மகா :—“என் ஜோஸ்யம் பலிக்கிறதா இல்லையா பாரேன்.”

இவ்விதமாக சிறிது நேரம் பரிகாசமாகவும், சிறிது நேரம் சாதாரணமாகவும் பேசிக்கொண்டே ஞானசௌந்தரியும் மகாதேவனும் சென்னையைச் சேரும்போது இரவு பத்துமணி யாய்விட்டது.

இருபத்தேட்டாம் அதிகாரம்

வைதீகமும் லௌகீகமும்

சென்னைக்கு வந்ததுமுதல் மகாதேவன் வைதீக அனுஷ்டானங்களை விடாது செய்து வந்தான் என்று மேலே குறிப்பிட்டிருந்தோம். தகப்பனருக்காகவும், முக்கியமாகத் தன் குடும்பத்திற்குத் துணையாக வந்திருந்த அத்தையம்மாளுக்காகவுந்தான் அவ்விதம் செய்து வந்தானே தவிர, அவைகளில் உள்பற்று ஏற்படவில்லை. எனவே அவன் வைதீகம் நடிப்பு வைதீகம். வீட்டில் இருக்கும் நேரங்களில் பூர்வ ஆசாரங்களை கவனமாகக் கைப்பிடித்து நடந்து வந்தாலும், வெளியில் போகும் நேரங்களில் அவைகள் எல்லாம் காற்று வாக்கில் போய்விடும். ஆசாரங்களைப் பற்றி அவன் யோசித்து முடிவுசெய்தது, அவைகளில் பெரும்பான்மையானவை மூட நம்பிக்கையால் ஏற்பட்டவையென்பதே. பெரியவர்கள் மனதை; அதுவும் அவர்கள் மனது புண்ணாயிருக்கும் சமயத்தில், வருத்தக்கூடாது என்பது ஒன்றையே கருதி, வீட்டில் இருக்கும் நேரங்களில் சிரத்தையாக எல்லா அனுஷ்டானங்களையும் செய்தும் ஆசாரங்களுக்குக் கீழ்ப்படிந்தும் வந்தான். ஞானசௌந்தரியோடு திரிசிராப்பள்ளியிலேயே ஏற்பட்ட நட்பு வளர்ந்து ஓங்கி அன்பாக மாறினதையும் உணர்ந்தான். மேல் அதிகாரத்தில் நடந்த சம்பவங்களுக்குப்பிறகு ஞானசௌந்தரியிடம் தனக்கு அன்பு ஏற்பட்டிருந்தது போலவே அவளுக்கும் தன்னிடம் அன்பு உதித்திருந்தது என்பதை உணர்ந்தான். தான் அதற்குப் பின் என்ன செய்யவேண்டியது என்பதைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கலானான். ஏதாவது ஒரு முறைப்படி கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணம் இல்லாவிடின் பரஸ்பரம் நேசம் ஏற்பட்டாலுங்கூட அதைவளரவிடுவது பிசகு என்ற சர்வஜன சம்மதமான ஒழுங்கு முறையை அறிந்தவன்தானே. ஞானசௌந்தரியைத் தான் மணப்பதானால் எந்த முறைப்படி மணக்கமுடியும்? வைதிக முறையில் யோசித்து முடிவுசெய்த மட்டிலும் ஒரு முறையும் இல்லை. ஆனால் ‘முறை’ என்னும் கொடுங்கோன்மைக்கு உட்படுவதென்றால் மனது கேட்கிறதாக இல்லை. இயற்கையாக ஏற்பட்ட ஸ்திரீபுருஷ வாஞ்சையை மனிதர்கள் கரைகட்டுவது ஒரு பெரிய கொடுங்கோன்மையென்று அவன் மனதிற்கு பட்டது. மதம், ஆசாரம், சட்டம், விவாகமுறை இவைகளெல்லாம் தானாகப் பெருகியோடும் உள்ளக்கிளர்ச்சியை அணைபோடும் முயற்சியென்று தீர்மானித்தான். எல்லாக் காலங்களிலும், எல்லாத் தேசங்களிலும் இவ்வித வரையறை ஏற்பட்டிருப்பதற்கு ஒரு சிறந்த கருத்து இருக்க வேண்டுமென்பது மட்டும் அவனுக்குப் புலப்

படவில்லை. இதுபோன்ற விஷயங்களைப் பற்றித் தெளிவாக அவனுக்கு எடுத்துக் கூறக் கூடியவரும் ஒருவரும் இல்லை. வழக்கம் என்னும் கொடுங்கோன்மை என்னதான் அவனுக்கு வெறுப்பை உண்டாக்கக் கூடியதாக விருந்தாலும் அதை உதறி யெறிந்து விடுவதும் ஆகாத காரியம் என்பது தெளிவாயிற்று.

ஞானசௌந்தரியை முறைப்படி எவ்விதம் பெறலாம் என்பதைப் பற்றிப் பலவிதமாக யோசித்து முடிவில் ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்தான். விவாகப் பதிவு உத்தியோகஸ்தர் முன்பாக விவாகம் செய்வது சட்ட சம்மதமானதால் அதுவே முறையென்று தீர்மானித்தான். அதற்கு ஞானசௌந்தரிக்கு சட்டப்படியுள்ள வயது வந்ததும் இருவரும் விவாகப்பதிவு உத்தியோகஸ்தர் முன்பாக விவாகம் செய்துகொண்டு புருஷனும் மனைவியுமாக வாழலாம என்று மனதில் முடிவு செய்தான். எப்படியும் முறைப்படி மணந்து கொள்ளும் வழி ஒன்றிருக்கிறது என்பது புலப்பட்டபின், தான் ஞானசௌந்தரியோடு தனித்துப் பேசுவதும், அவளை உலாவ அழைத்துப் போவதும், வெகுமதிகள் வாங்கிக்கொடுப்பதும் முறைப் பிசகல்ல என்று மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டான். ஞானசௌந்தரியை மறுபடி பார்த்து சில நாட்களானதும் மகாதேவன் மனம் அநேகமாக முன்போ லாகிவிட்டது. வீட்டில் ஒவ்வொரு சமயங்களில் தகப்பனார் படும் துக்கத்தைப்பார்த்துத் தானும் துக்கமடைந்தாலும், மற்ற நேரங்களில் வெகு உற்சாகமாகவே இருந்தான். மறுபடி உதைப்பந்து விளையாட்டில் கருத்தைச் செலுத்தி சென்னையில் அவன் படித்த காலேஜ் உதைப்பந்து கோஷ்டியில் தலைவனானன். திரிசிராப்பள்ளியில் இருந்தகாலத்தில் ஞானசௌந்தரி தன் உதைப்பந்து விளையாட்டுத் தேர்ச்சியைப் புகழ்ந்து வீரன் என்று போற்றியதே அவனுக்கு உதைப்பந்தாட்டத்தில் கருத்தைச் செலுத்த ஒரு மேலான தூண்டுகோலாயிற்று. சென்னையில் நடந்த ஒரு போட்டிப் பந்தாட்டத்தில் மகாதேவன் சாமார்த்தியத்தினால் அவன் காலேஜ் கோஷ்டி வெற்றிபெற்றது. அவன் காலேஜ்பையன்களில் உதைப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட பலர் அவன் ஆட்ட சாமார்த்தியத்திற்கு வியந்து அவனுக்கு ஒரு தங்கமெடல் பரிசளித்தார்கள். அந்த மெடலைப் பெற்றதும் அதைத் தன் தகப்பனாருக்குக்கூடக் காட்டாமல் நேரே ஞானசௌந்தரி வீட்டிற்குப் போனான். ஞானசௌந்தரியையும் அருளானந்தத்தையும் பார்த்து அவர்களிடம் தான் மெடல் வாங்கின விவரத்தைச் சொல்லிப் பிறகு அதை ஞானசௌந்தரிக்கு வெகுமதியாகக் கொடுத்தான். அவளும் அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாள்.

இருபத்தோன்பதாம் அதிகாரம்

பிரிவு

முன் அதிகாரத்தில் கூறிய விஷயங்கள் நடந்த மறுவாரம், ஒரு நாள் மகாதேவன் அருளானந்தம் வீட்டிற்குப் போயிருந்தபோது அருளானந்தம் தன் தகப்பனார் வெகு சீக்கிரமாக சென்னையைவிட்டுப் புறப்படக் கூடுமென்று சொன்னான். அதிகச் சம்பளத்தில் கல்கத்தாவில் ஒரு வேலைக்குப் பிரயத்தினம் செய்து கொண்டிருப்பதாகவும் பிரயத்தினம் அநேகமாக அநுகூலமாகி விட்டதென்றும் சொன்னான். அதற்கு அடுத்த வாரமே புறப்பட வேண்டியிருக்குமென்றும் சொன்னான். அதிகச் சம்பளத்தில் வேலை கிடைத்ததைப்பற்றி சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அருளானந்தம் படித்துக்கொண்டிருந்தபடியால் அவனும் தகப்பனாருடன்கூட கல்கத்தாவுக்குப் போவது சாத்தியமில்லாம லிருந்தது. அவன் சென்னையிலேயே யிருந்து படித்துக் கொண்டிருப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. தேவ ஆசீர்வாதம் ஞானசௌந்தரியை அழைத்துக்கொண்டு கல்கத்தாவுக்குப் போகிறதென்று தீர்மானம் செய்யப்பட்டது. ஞானசௌந்தரி கல்கத்தாவுக்குப் போக வேண்டியது என்பது தெரிந்தபிறகு, நாள் தவறாமல் மகாதேவன் அருளானந்தம் வீட்டிற்குப்போய் பிரதிதினம் இரண்டு மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தான். அந்த சமயம் சௌரியப்பன் பாளையங்கோட்டைக்குப் போயிருந்ததால் மகாதேவன் இஷ்டப்படி போய் பேசிக்கொண்டிருப்பதில் தடை ஒன்றும் ஏற்படவில்லை. மகாதேவனும் ஞான

சௌந்தரியும் ஒரு புகைப்படம் எடுக்கிறவரிடம் சென்று இருவரும் சேர்ந்து ஒரு புகைப் படமும், ஒவ்வொருவரும் தனியாக இரண்டு புகைப்படங்களும் எடுத்துக்கொண்டார்கள். ஞானசௌந்தரி கல்கத்தாவுக்குப் போவதற்கு முன்தினம் அவளை மகாதேவன் கடற்கரைக்கு உலாவ அழைத்துச் சென்றான். வெகு நேரம் பழைய சம்பவங்களைப் பற்றி இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு இருவரும் வீட்டிற்குத் திரும்பிவருகையில், "மறுபடியும் இனி நாம் எப்பொழுது சந்திக்கப் போகிறோமோ ?" என்றான் மகாதேவன்.

ஞானசௌந்தரி :—"நான்தான் சொல்லி விட்டேனே. மூன்று வருஷம் சென்றதும் நான் சுயம்வரம் செய்துகொள்வேன். நீர் அப்போது வரமுடியுமானால் வரலாம்."

மகாதேவன் :—"நானும்தான் சொல்லி விட்டேனே. உன் சுயம்வரத்தின் போது நான் எங்கே யிருந்தாலும் வந்து சேருவேன். நீ என்னை மாலையிட்டால் சரி. வேறு யாரையாவது மாலையிட்டாலோ உன்னைத் தூக்கி வந்து விடுவேன்."

ஞான :—"என் சுயம்வரத்திற்கு நீர் வரும்போது நீர்மட்டும் வருவீரா! அல்லது அதற்கு முன் நீர் நிச்சயமாக விவாகம் செய்து கொள்ளப் போகும் உமது மனைவியையும் அழைத்து வருவீரா ?"

மகாதேவன் :—"நீதான் பார்க்கப் போகிறாயே."

ஞான :—"ஆம். பார்க்கத்தான் போகிறேன். என் ஜோஸ்யம் பலிக்குமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

மகா :—"உன் ஜோஸ்யம் முழுப் பொய் ஜோஸ்யமாகிவிடும் என்பதை நான் இப்போதே தெரிவிக்கிறேன்."

இவ்விதம் விளையாட்டாகப் பேசிக்கொண்டே மகாதேவன் ஞானசௌந்தரியை அவள் வீட்டிற்குக் கொண்டு போய் விட்டான். அவள் வீட்டிற்கு அதற்குள் புகைப்படங்கள் தயாராகி வந்திருந்தன. அவைகளில் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் ஒன்றையும், ஞானசௌந்தரி மட்டும் தனியாக இருந்த படம் ஒன்றையும் எடுத்து அவைகளின் அடியில் தன் கையொப்பமிட்டு ஞானசௌந்தரி மகாதேவனுக்குக் கொடுத்தாள். மகாதேவனும் அவைகளை வாங்கி வைத்துக்கொண்டான். இருவரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட மற்றொரு படத்திலும் தான்மட்டும் இருந்தபடம் ஒன்றிலும் தன் கையொப்பமிட்டு ஞானசௌந்தரியிடம் கொடுத்தான். பிறகு சிறிதுநேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு தயங்கித் தயங்கி அவ்வீட்டை நீங்கித் தன் வீட்டிற்கு வந்துசேர்ந்தான். மறுநாள் ஞானசௌந்தரியும் அவள் தகப்பனாரும் கல்கத்தாவுக்குப் புறப்படும் தினமானதால் அன்று மாலையில் தேவ ஆசீர்வாதம் வீட்டிற்குச் சென்று அவரிடமும் சிறிதுநேரம் பல விஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டு ஞானசௌந்தரியையும் மறுபடி பார்த்துவிட்டுப் பிறகு தன் காலேஜுக்குச் சென்றான். அன்று இரவு அவர்கள் புறப்படும் ரயில், ஸ்டேஷனிலிருந்து புறப்பட அரைமணி நேரத்திற்கு முன்னாலேயே மகாதேவன் ரயில் ஸ்டேஷனுக்குப் போயிருந்தான். ஸ்டேஷனில் அவர்களை வண்டியில் ஏற்றிவிட்டு, வண்டி புறப்பட்டுப் போகும்வரை அவர்களுடன் திருப்பித் திருப்பி ஏதேதோ பேசிக்கொண்டு நின்றான். அருளானந்தமும் அவர்களுடன் கல்கத்தாவுக்குப்போய் இரண்டு நாள் தங்கிவிட்டுத் திரும்பிவருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி அவனும் அவர்களுடன் சென்றான். ரயில் புறப்பட்டுப் போகும் வரையில் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மகாதேவன் ரயில் புறப்பட்ட பிறகும் சிறிது தூரம் கூடவே சென்று பின் நின்று ரயில் மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்தான். மறைந்த பிறகுதான் வீட்டை நோக்கித் திரும்பினான்.

ஞானசௌந்தரி சென்னையை விட்டு நீங்கின பிறகு மகாதேவனுக்கு சென்னையில் வாழ்வதில் ருசியே இல்லாமற் போய்விட்டது. அடிக்கடி ஞானசௌந்தரியையே நினைத்து நினைத்து ஏங்கித் தவித்தான். அவள் புகைப்படத்தை ஒவ்வொருநாளும் ஒரு ஆயிரம் தடவை எடுத்துப் பார்ப்பான். அவள் உடம்பின் ஒவ்வொரு அங்கத்தையும் புகைப்படத்தில் பார்த்தும் மனவெளியில் உருவப்படுத்தியும் அதே காரியமாகப் பொழுது போக்கலானான். ஞானசௌந்தரி கல்கத்தா போய்ச் சேர்ந்தது

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி யொல்லாது வானம் பெயல்.

முதல் அவளிடமிருந்து கடிதம் கிடைக்கு மென்று எதிர்பார்த்தான். பல நாட்கள் சென்றும் கடிதம் ஒன்றும் கிடைக்கவில்லை. தன்னை மறந்து போய்விட்டாள் என்று சிறிது வெறுப்புக்கொண்டு அவளிடமிருந்து முதலில் கடிதம் கிடைத்தால்தான் அவளுக்குத் தான் எழுதுகிறது என்பதாகத் தீர்மானம் செய்தான். அந்தத் தீர்மானம் செய்த மறுதினமே தீர்மானம் மாறிவிட்டது. ஞான சௌந்தரியும் தன்னைப் போலவே தன்னிடமிருந்து கடிதம் எதிர்பார்த்திருப்பாள் என்பதும் அவளும் தன்னிடமிருந்து கடிதம் கிடைக்காததால்தான் அவளை மறந்துவிட்டதாகத் தீர்மானித்துவிடக் கூடும் என்பதும் மகா தேவன் நினைவுக்கு வந்தது. உடனே அவ்விதமாகத் தன்னைப்பற்றி ஞானசௌந்தரி பிசகாக நினைக்க இடம் கொடுக்கக்கூடாது என்பது கருதி அவளுக்கு ஒரு கடிதம் எழுதித் தபால் மூலம் அனுப்பினான். அக்கடிதம் போய்ச் சேருவதற்கு ஒருநாள் முன்னதாக ஞானசௌந்தரி எழுதிய கடிதம் அவனுக்குக் கிடைத்தது. கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்த அருளானந்தம் தன் காலேஜைவிட்டு விடுவதாகத் தீர்மானித்துவிட்டதாகச் சொன்னான். அப்போது மகாயுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலம். மெஸபொடோமியாப் போர் முனையில் பிரிடிஷ் படைக்குப்பின் உதவி செய்வதற்காகச் சேர்க்கப் பட்ட படையில் அருளானந்தம் சேர்ந்தான். சேர்ந்து சிலநாள் சென்றதும் சென்னையிலிருந்து புறப்பட்டுப் போய்விட்டான். புறப்படுமுன், அருளானந்தமும் மகாதேவனும் சேர்ந்து புகைப்படம் ஒன்று எடுத்துக்கொண்டார்கள். வாரம் ஒரு முறை தவறாமல் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதுவதாக இருவரும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

முப்பதாம் அதிகாரம்

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்

1917-மு௵ மார்ச்௴ 26௳ யன்று சென்னை பிரபல பாங்கி, கன்கார்டு பாங்கி முறிந்து போனது உலகப் பிரசித்தமான விஷயம். அன்றுமாலை அந்தபாங்கிக் கட்டடத்தின்முன் கூடியிருந்த பெருத்த கூட்டத்தைப்பற்றியும் அங்கு கூடியிருந்தவர்களில் பலர் பலவிதமாக நொந்துகொண்டு புத்தி தடுமாறியும், தலையில் அடித்துக்கொண்டும், வாய்கொண்ட மட்டும் திட்டியும், மண்ணை வாரி இறைத்தும் தங்கள் மனவருத்தத்தை வெளியிட்டதைப் பற்றியும் அது முதல் பலநாட்கள் வரை சென்னையிலும் மற்ற ஊர்களிலும் அதுவே பெரிய பேச்சாக இருந்தது. ஆயிரக் கணக்கான குடும்பங்களை ஒரே நாளில் அந்தப் பாழும் பாங்கி முழுகிப்போக அடித்துவிட்டது. வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டித்தங்கள் அருமைக் குழந்தைகளுக்கும் கூட முழுவயிற்றுக்கு உணவளிக்காமல் பணத்தைத் திரட்டி வைத்து வயது காலத்தில் கவலையன்னியில் வாழலாம் என்று எண்ணி எல்லாப் பொருளையும் இந்தபாங்கியில் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு ஏமாந்தவர்கள் பலர். சகோதரர், சகோதரிகளுக்குத் தெரியக்கூடாதென்று தங்கள் வருமானத்தில் பெரும் பாகத்தை ஒருவரும் அறியாமல் பாங்கியில் சேர்த்துவைத்துவிட்டு சகோதர வாஞ்சையும் வறண்டுபோக அதற்கெல்லாம் காரணமாகவிருந்த பணவாசைப் பேய் மகிழக்கூடிய பணக்குவியலும் அழிந்து போக உயிர்வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டவர்கள் பலர். காரை வீடு கட்டிக் கண்ணியமாய் வாழ்ந்தபின் கூரை வீடு தேடித் தெருத் தெருவாக அலைபவர் பலர். கணக்கைப் பார்த்துப் பார்த்து உள்ளம் மகிழ்ந்து அடுத்த மாதத்தில் மொத்தமாக வீடுவாங்க எண்ணி, பாங்கி முறியவே அத்துடன் தங்கள் மனமும் உடைந்தவர் பலர். யௌவனப் பருவத்தில் செல்வந்தர்களைத் தங்கள் ஆசைவலையில் சிக்க வைத்து அவர்கள் பணத்தை உறிஞ்சி பாங்கியில்போட்டுவைத்துவிட்டு, வயது காலம் வந்தபின் பாங்கி முறியவே வேறு சம்பாத்தியத்திற்கும் வழியற்று நிர்க்கதியான நித்திய சுமங்கலிகள் பலர். நெற்றி வேர்வை நிலத்தில் சொரிய தேகத்தை வாட்டி, சுவற்ப ஊதியம் பெற்று அதில் ஒரு சிறுபாகத்தை பாங்கியில் போட்டுவிட்டு உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் வியர்த்தமாகவே மனமிடிந்து போனவர் பலர். அந்த ஒரு தினத்தில் அநேக குடும்பங்கள் நிலை தடுமாறி விட்டன. பாங்கு அதிகாரிகளை மனமார வைவார் பலர். தங்கள் மதியை நொந்து கொள்வார்

பலர். விதியை நினைந்து வருந்துவார் பலர். வேதாந்தம் பேசி ஆறுதலடைவார் சிலர். ஆனால் ஆபத்துக் கால வேதாந்தம் தீவிர வேதாந்த மல்லவே? "வாழ்வாவது மாயம்" என்று சொல்லி அடுத்த நிமிஷத்தில் "போகட்டும், ஈவு என்ன கிடைக்கும்?" என்று பார்த்தவர்களை யெல்லாம் கேட்பார் இவ் வாசா வேதாந்திகள். ஆண், பெண், படித்தவர், படியாதவர், மேலோர், கீழோர் என்ற வித்தியாசமன்னியில் எல்லோரையும் ஒருமிக்க நடுச்சந்தியில் இழுத்து நிறுத்தி விட்டது 'கான்கார்டு' பாங்கி.

நாராயணய்யர் ஹஞ்சலூரை விட்டுவிட்டு சென்னைப்பட்டணத்திற்கு வந்ததும் ஒரு நண்பர் யோசனைப்படி ஹஞ்சலூர் வீடு ஒன்று தவிர மற்ற எல்லா சொத்துக்களையும் விற்றுவிட்டு கையில் இருந்த பணத்தையும் சேர்த்து "கான்கார்டு" பாங்கியில் போட்டிருந்தார். கான்கார்ட் பாங்கி முறிந்துபோய்விட்ட சமாசாரம், முறிந்த அன்றுமாலையில் சென்னையில் எல்லா இடங்களிலும் பரவிற்று. மகாதேவன் உண்மையை அறிந்து வருவதற்காக அந்த பாங்கிக் கட்டடத்திற்குச் சென்றான். பணம் இழந்தவர்களும் மற்றவர்களுமாகச் சேர்ந்த பெரிய கூட்டத்தைக் கண்டான். விசாரித்து உண்மை அறிந்துகொண்டான். அறிந்தும் முழுதும் அறியவெண்ணி வெகு சிரமப்பட்டு கூட்டத்தை விலக்கிக்கொண்டு பாங்கி ஆபீஸ் வாசலுக்கருகில் போய்ச்சேர்ந்தான். ஆபீஸ் வாசலில் ஒரு பெரிய பலகையில் "கான்கார்டு பாங்கிக்காரர்கள் பணம் கொடுப்பதை நிறுத்தியிருப்பதாக மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்" என்பதாக எழுதியிருந்தது. கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் அடைத்துப் பூட்டுகள் போட்டிருந்தன. கட்டடத்தைச் சுற்றிப் போலீஸ் சேவகர்கள் வெகு ஜாக்கிரதையாக காவல் கார்த்துக்கொண்டிருந்தார்கள். இவைகளைப் பார்த்ததும் மகாதேவனுக்கு ஒன்றும் தோன்றாமல் தூண்போல நின்றுவிட்டான். பக்கத்தில் நின்று அவன் செயல்களைக் கவனித்த சிலர் அவனை மெதுவாக கூட்டத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றார்கள். அதற்குள் அந்தக் கூட்டத்திலிருந்தவர்களில் அவனைத் தெரிந்த சில நண்பர்கள் அவனண்டைவந்து தங்களுக்குத் தெரிந்த ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லி வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

பாங்கி முறிந்த சங்கதி கேட்டதும் நாராயணய்யருக்கு இடிவிழுந்ததுபோல் இருந்தது. அவர் நண்பர்கள் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி தங்களால் இயன்றமட்டும் அவரைத் தேற்றினார்கள். பாங்கிக்காரர்கள் தற்கால யோசனையாக பணம் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்றும், மறுபடி கூடிய சீக்கிரத்தில் சரிவர தொழில் ஆரம்பித்து விடுவார்கள் என்றும் சொன்னார்கள். முதலில் சிலநாட்கள்வரை அவர் அந்த வார்த்தையில் சிறிது ஆசைவைத்திருந்தார். ஆனால் பிறகு அந்த ஆசையும் நழுவிவிட்டது. சிறிது நம்பிக்கையும் நழுவவே, நாராயணய்யர் எல்லையற்ற துக்கக்கடலில் ஆழ்ந்தார். பெருத்த செல்வத்தில் இருந்து பெருக வாழ்ந்த பிறகு அடிமேல் அடியாக மனைவி சாக்காடு, பொருள் நஷ்டம், எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்ததால் யாரால்தான் அவைகளைத் தாங்கமுடியும்? நினைவு தடுமாறி முன் நிலைமையையும் மேலுக்குமேலாக தனக்குச் சமீபகாலத்தில் சம்பவித்த ஆபத்துக்களையும் நினைத்து நினைத்து ஏங்கி உள்ளம் உடைந்து பைத்தியம் பிடித்தவர் போலானார்.

அகஸர்.—தென் கன்னட ஜில்லாவில் காணும் வண்ணார ஜாதியில் ஒரு வகையார். கொங்கண கிறிஸ்தவர், கன்னடம் பேசுபவர், துளு பேசுபவர் என மூவகைப்படுவர். துளுபேசும் வகையினர் மருமக்கத் தாயத்தைக் கைக்கொண்டவர். அகஸருக்கு மடிவாலர் என்பது ஒரு பரியாயப் பெயர். (மடி = சுத்த வஸ்திரம்) அகஸி என்ற பதத்துக்கு தலைப்பாகை என்பது பொருள். அதை யுடையவர் அகஸர். மைஸூர் ராஜ்யத்தில் காணும் அகஸர்க்கு வேஷ்டி வெளுப்பது, தானியங்களைக் கழுதைகளின் மீதேற்றி ஊரூராய்க் கொண்டுபோய் விற்பது, தீவர்த்தி பிடிப்பது தொழிலாம். வணங்கும் தெய்வம் பூமதேவன். இவர் வைஷ்ணவர். சாத்தானியர் இவர்க்கு குருமார். பெண்கள் ருதுவானால் அந்த சமாசாரத்தை வண்ணானே புருஷன் வீட்டாருக்குத் தெரியப்படுத்தும் உரிமை யுடையவன். இவன் இதற்குச் சம்மானம் பெறுவான்.

ரஸந்தானி.—யமலோகத்தில் மனிதர்களுடைய புண்யபாவங்களைச் சித்ரகுப்தன் எழுதிவைக்கும் கணக்குப் புஸ்தகத்துக்குப் பெயர்.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா லொத்தாங் கொறுப்பது வேந்து.

மார்க்கண்டேயன்

MARKANDEYA

(215-ம் பக்கத் தொடர்ச்சி.)

சட்டாம் :—சை கொட்டாப்புளி!

லம்போ :—சட்டாம்பிள்ளை கொட்டாப் புளின்னு இசைஞ்சு இருக்கு;

சட்டாம் :—வாத்யார் வரட்டு முனக்கு அடே! கோவிந்தா நீ சொல்லு 'சூலம் வஜ்ரஞ்ச கட்கம்'.

கோவிந் :—சூலம் வெச்சிருந்த கடுக்கன்.

சட்டாம் :—அதிகப்ரஸங்கி! தத்தா! நீ சொல்லுடா 'தோர்பிர்யுக்தா சதுர்பி:'

தத்தன் :—தோப்பிற்குள் கொள்ளிவாய் பேய்.

சட்டாம் :—மண்டு! நீலகண்டா நீ சொல்லு.

நீல:—நானு மண்டு? என்ன புரியலேப் போலே இருக்கு.

சட்டாம் :—எதுடா ஒண்ணைவிட ஒண்ணு வக்ரங்களாயிருக்கு! ஒன்னையாருடா சொன்னு! அறஞ் செயவிரும்பு. அர்த்தஞ் சொல்லுடா.

நீல :—நான் வக்ரந்தாண்டாப்பா! அரம்-அரம் எங்கிற ஆயுதத்தைச் செய-செய்வதற்கு இரும்பு - இரும்புவேணும்.

சட்டாம் :—எதேது! உங்களுக்கென்ன-வாத்யார் வந்தா எனக்குன்னு வலுவாப் பொப்பம் பழங் கிடைக்கும்.

லம்போ :—ஏ! ஏய்! எனக்கு அதுலே நல்லதா நாலுபழம்டா!

சட்டாம் :—வாத்யார் வராப்பிலே இருக்குடா எல்லாரும் வரிசையாய் நில்லுங்கடா. சரியாச் சொல்லுங்கடா!

எல்லோரும் வரிசையாய் பயந்து உட்கார்ந்து கொண்டு சட்டாம்பிள்ளை முறை சொல்ல-அமரிக்கையாய் சொல்லுதல்.

ஸர்வாலங்க்ருதனை மார்க்கண்டேயனை-முன்னிட்டு, ம்ருகண்டு, மருத்வதி, வித்யாஸாகரர், இரண்டுப்ராஹ்மணர்கள் ஒரு தாம்பாளத்தில் பழம்-காப்பரிசி தாம்பூல கல்பூராதிகளைத் தாங்கி ஒரு சிஷ்யன்-யாவரும் ப்ரவேசம்.

லம்போ :—(கோவிந்தனிடம்)-நீ மட்டும் சொல்லாதே; காப்பரிசி பழம் எல்லாம் இரண்டு தரம் வாங்கிவிடுகிறேன்.

கோவி:—எனக்கும் பங்கு தரயோ?

லம்போ :—ஆஹா.

கோவிந்த :—ஆனு சொல்லலே.

வித்யாஸாகரர் :—(ம்ருகண்டுவையும் ப்ராஹ்மணர்களையும் வணங்கி) இப்படி உட்காருங்கள். லக்னம் வந்துவிட்டது - வித்யாரம்பம் செய்து விடலாம்.

ப்ராஹ்மணர்கள்-ஆஹா! அப்படியே!

ஒரு ப்ராஹ்மணர் :—இந்தாருங்கள். பவித்ரத்தைப் போட்டுக் கொள்ளுங்கள் (ம்ருகண்டு பவித்ரத்தைத் தரித்துக் கொள்ள) சுக்லாம்பரதரம்......(ப்ராஹ்மணன் சொல்ல ம்ருகண்டு உடன் சொல்வது) மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம்,அஸ்யமம-ன்னுசொல்லாது (ம்ருகண்டு) மம, (ப்ராஹ்)-குமாரஸ்ய க்ஷேமஸ்தைர்யவீர்ய விஜய, ஆயுராரோக்ய அபிவ்ருத்தியர்த்தம் பாரதீப்ரஸாத வித்தியர்த்தம்,வேதோக்த அக்ஷராப்யாஸ கர்மஸமாரப்ஸ்யே அயம் முஹூர்த்த: ஸமுஹூர்தோஸ்த்விதி பவந்தோ மஹாந்தோனு க்ருஹ்ணந்து. (மற்றொரு ப்ராஹ்மணனும் வித்யாஸாகரும்) ததாஸ்து.

ப்ராஹ் :—ஆதௌ விக்னேச்வர பூஜாம் கரிஷ்யே-(மஞ்சளைப் பிடித்துவைத்து) அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸுமுகம்விக்னேச்வரம்த்யாயாமி.ஆவாஹயாமி; அர்க்ய பாத்யாசமனீயாதீன் ஸமர்ப்பயாமி ஸுமுகாயநம:—ஸ்ரீமஹா கணபதயே நம: நானுவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி. தூபதீபனைவேத்யகல்பூராணி ஸமர்ப்பயாமி.அஸ்மின்தானபத்ரக்ரந்தே ஸரஸ்வதீம் த்யாயாமி ஆவாஹயாமி. ஷோடசோபசாரான் ஸமர்ப்பயாமி. அக்ஷதான் ஸமர்ப்பயாமி. தூபதீபார்த்தாம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி. நேவேத்யம் 'ஸ்ரீஸரஸ்வத்யைநம:. ரக்ஷா தண்டுலம்-கதலீபலம் நாளிகேர கண்டத்வயம்-தாம்பூலம் அம்ருதம் மஹா நைவேத்தியம் நிவேதயாமி. (கல்பூரம்) கல்பூர நீராஜனம் தெர்சயாமி.

ம்ருகண்டு (நமஸ்கரித்துவிட்டு) குழந்தாய் நமஸ்காரஞ் செய். மார்க்கண்டேயன்-(நமஸ்கரித்தல்)

ம்ருக :—உபாத்தியாயருக்கு நமஸ்காரஞ் செய் (நமஸ்கரித்தல்)

வித்யா :—குழந்தையை மடியில் வைத்துக் கொள்ளுங்கள். உட்காருங்கள். (மார்க்கண்டேயனை நோக்கி) குழந்தாய்! நான் ஒரு தரம் சொல்வேன். நீ இரண்டிரண்டு தரம் சொல்லவேண்டும். சொல்லு (அப்படியே சொல்லுதல்) ஹரி: ஓம். நமோ நாராயணுய வித்தம்: அ,ஆ...

ப்ராஹ் :— இந்தாருங்கள் (ஒரு தேங்காய் மூடி. இரண்டு பழம் பாக்கு வெத்திலையை கொடுத்து. குருஸம்பாவனை செய்யுங்கள்.

ம்ருக :—குரவே இயம் யத்கிஞ்சித் ஸம்பாவனு.

ப்ராஹ்ம :—ப்ருஹஸ்ப்தி ஸம்பாவனை.

ம்ருகண்டு:—(மற்ற தேங்காய்மூடி வெத்திலை, பாக்கு, பழம் தக்ஷிணையுடன் இயம் யத்கிஞ்சித் ப்ருஹஸ்பதி ஸம்பாவனு.

(மற்றொரு ப்ராஹ்மணருக்கும் மாணவர்களுக்கும்பூரி கொடுத்தல்) காப்பரிசி முதலியன விநியோகம்.

ம்ருகண்டு:—(எழுந்து) கண்ணே! மார்க்கண்டேயா! இதுமுதல் உன் வித்தியாப்யாஸ காலம் முடியுமட்

டும்- (வித்யாஸாகரரைக் காட்டி) இவர்களே உனக்குத் தந்தையுந் தாயுந்தெய்வமுமென்றுநினை. நான் சொல்லும் இந்த வார்த்தைகளை என்றைக்கும் உறுதியாய் கடைப்பிடி.

ராகம். மாயாமாளவகௌளை. தாளம். ஆதி.

பல்லவி.

இந்த உபதேசமொழி சிந்தையில் வைப்பாய். குழந்
[தாய்.

அனுபல்லவி.

எந்தத் தினமும் விடியும் முந்தியே எழுந்து, குரு-
இருபதம் நினைந்து கொண்டொரு மனதொரு
நாளும் (இந்த)

சரணம்

சோம்பலுக்கிடங்கொடாதே
பொய்மொழிகளைப் பேசாதே
தூங்கும் பித்தனென்ற பெயர்
வாங்காதே, சிறிது நாளில்
நாம் பல கற்றோமென்ற அஹந்தை
கொள்ளாதே, குரு நாதனுக்கு சிச்ருஷை
செய்வதில் பின்வாங்காதே. (இந்த)
தெரிந்ததா இவருக்கு ஸகல சிச்ருஷைகளையுஞ்
[செய்து
பயபக்திச்ரத்தையுடன் வித்தையைக்ரஹித்துக்
கொள். உனக்கு மங்கள முண்டாகட்டும்.

ம்ருத் :—(ஷை பாட்டின் மற்றோர் சரணம்.)

இந்தப் பையன்களை நீ ஸ்வந்தத்
தோழர் போலெண்ணு (இந்த)
தந்தைதாய் கூறிட்டாலும் சிந்தை
மகிழ்ந்தே உண்ணு
கந்தை யேனும் அன்றன்று கசக்கியே
ஸ்னானம் பண்ணு
தொந்த நோய்க்கிடங்கொடாதே
ஜாக்ரதை என்றன் கண்ணே. (இந்த)

(குழந்தையை அணைத்துக்கொண்டு)

என் கண்ணே! நீ சிறந்த ஞானதனத்தையடைந்து உலகம் மெச்சும்படி எங்களிடம் திரும்பிவருவாயென்ற ஸந்தோஷத்தால் மட்டும்-உன் பிரிவாற்றாமையை ஸஹித்திருப்பேன். வீண் விளையாட்டு முதலியவைகளில் உன் புத்தியைச் செலுத்தி, வெய்யில் பனிமுதலிய உபாதிகளால் உடம்பைக் கெடுத்து கொள்ளாதே. உன் தேஹத்திலும்-படிப்பிலுங் கண்ணாயிரு. உன் குருமூர்த்தியின் மனம் நோகும்படி நடந்து கொள்ளாதே. குழந்தைகளுடன் சண்டை போடாதே. விஷமஞ் செய்யாதே. உனக்கு ஜகதீசன் க்ஷேமத்தை கொடுக்கட்டும். (முந்தானையால் தன் கண்ணீரைத் துடைத்தல்)

வித்யா :—மஹர்ஷே! குழந்தையை எதாவது ஈச்வர ஸ்தோத்ரஞ் செய்யச் சொல்லுங்கள்.

ம்ருக :—மார்க்கண்டேயா! நீ அடிக்கடி பாடுவாயே அந்த தேவஹிரத்தைப் பாடு! (மார்க்க—பாடுதல்)

நீலக :—ஆஹா! ஆஹா! என்ன உருக்கம்!

தத்தன் :—வாக்கு எவ்வளவு சுத்தமாயிருக்கு பார்த்தையா.

சட்டாம் :—அடே! லம்போதரா! உன்னையும் ... அப்பாவும், அம்மாவும் எங்காத்துக்காரரும் உத்யோகம், பண்ணறார்னு சுவடி மூட்டையைச் சுமந்து பள்ளிக்கூடத்துக்கு வரச்சொல்லராளே பாருடா! பாட்டை!

லம்போ :—ஆமாண்டா! நேக்கு, வயத்துப்பசி, பக்ஷணந்திங்கரது எல்லாங்கூட மறந்து போச்சுடா!

கோவி :—ஏய்! இவனுக்கு தெரியா பாட்டையெல்லாம் சொல்லிக் குடுக்கச் சொல்லி, அவங்கூட நாம்பளும் நித்யம் பாடனுண்டா!

வித்யா :—மஹர்ஷே! ஆனந்தம்! ஆனந்தம்! தங்கள் குமாரனை சிஷ்யனாயடைந்ததற்கு-தன்யனானேன்.

ம்ருக :—வித்யாஸாகரரே! தங்களுடைய அபார போதன சக்தியையும் சிஷ்யர்களிடம் தங்களுக்குள்ள வாத்ஸல்யத்தைய் முணர்ந்த நான் தங்களுக்குச் சொல்லவேண்டியதொன்றுமில்லை. மார்க்கண்டேயனைத் தங்கள் குமாரனாய்ப் பாவித்துக்கொள்ள வேண்டும். நாங்கள் உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறோம்.

மார் :—பித: அபிவாதனஞ் செய்கிறேன். அம்மா! நமஸ்காரம். இருவரையும் நமஸ்கரித்தல்.

ம்ருக :—சிரஞ்ஜீவ:! (வித்யாஸாகரரும்-ம்ருகண்டுவும் பரஸ்பரம் வந்தனஞ் செய்துகொள்ளல். மருத்வதியுடன் ம்ருகண்டு நிஷ்க்ரமித்தல்.

வித்யா :—சிஷயர்களே! பாடத்தை யெடுங்கள்! மார்கண்டேயா நீயும் சேர்ந்து சொல் (குரு ஒரு முறை-சிஷயர்கள் இரண்டு முறை)

சிஷயர்காள்! மாத்யாஹ்னிக காலமாகிவிட்டது. மாலை-ஸந்த்யாவந்தன வாக்யார்த்தத்தை ஒப்பிக்க வேண்டும். எல்லாரும் மனனம் செய்திருக்கிறீர்களா? எல்லோரும்—ஆஹா!

வித்யா :—ஸரி வாருங்கள், மார்க்கண்டேயா! மாத்யாஹ்னிகம் செய்ய வா! (வித்யாஸாகரர் முன்னும் எல்லோரும் பின்னும் நிஷ்க்ரமித்தல்.)

அக்னிமித்ரன்.—இந்தியாவிலாண்ட சுங்க வம்சத்தரசன். புஷ்யமித்ரனுடைய மகன். அவன் கிரேக்க வரசனான மினாண்டருடன் சண்டை செய்தபோது, அக்னிமித்ரன் விதிசா நகரத்தைத் தலை நகராகக் கொண்டு நர்மதைப் பிரதேசத்தில் பிரதிநிதியாக விருந்தான். பிறகு இவன் எட்டு வருஷம் அரசாட்சி செய்தான். மாளவிகாக்னிமித்ரம் என்ற வடமொழி நாடகத்தின் கதாநாயகன் இவனே.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

வைத்தியன் பெண்

(ஸர் வால்டர் ஸ்காட் எழுதியது)

THE SURGEON'S DAUGHTER

(BY SIR WALTER SCOTT)

(213-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது சிறுபெண் ஹார்ட்லி, மிடில்மாஸ் என்னும் இருவரோடும் தினந்தோறும் நெருங்கிப் பழகவேண்டி யிருந்தபோதிலும், தாம் ஒவ்வொரு நாளும் வெகு நேரம் அவளைத் தனியாக விட்டுச் செல்லவேண்டி யிருந்தபோதிலும், தமது பெண்ணும் தம்மைப்போலவே உண்மைக் குணமுடையவளா யிருந்தபடியால், டாக்டர் க்ரே அவளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை.

அன்று முதல் மேனி க்ரே அவ்விருவர்களுடன் பழகுவதில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொண்டாள். அவள் இருவரிடமும் ஒரே மாதிரியாக நடந்துகொள்ள முயன்றாள். ஆனால் அது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. ஏனெனில், ஹார்ட்லி அத்தியாவசியமான விஷயங்களைப்பற்றி மட்டும் மிகவும் மரியாதையாகப் பேசத் தொடங்கியதனால், அவனுடன் பேசுவதே அரிதாகிவிட்டது. ரிச்சேர்டோ முன்போலவே தயங்காமல் பேசிக்கொண்டும், வலுவில் அடிக்கடி பேசிப் பழகாவிட்டாலும், மெனிக்கும் தனக்குமுள்ள பழைய நட்பு குன்றா வண்ணம் பழகிக்கொண்டும் வந்தான்.

நான்காம் அத்தியாயம்

ஹார்ட்லியும் ரிச்சேர்டும் வேலை பழக்கிக்கொண்டது முடிந்து, அவர்கள் சொந்தத்தில் தொழில் செய்யவேண்டிய காலம் நெருங்கவே, டாக்டர் க்ரே ரிச்சேர்டை அழைத்து, தாம் அவன் சொந்தமாகத் தொழில் செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றி வற்புறுத்திப் பன்முறை மிஸ்டர் மான்சாடாவுக்கு எழுதியும், அவரிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்கவில்லையென்றும், அவனுடைய பாட்டனாரான அவருடைய இஷ்டம் இன்னதெனத் தெரியுமுன் தமது அபிப்பிராயத்தைத் தாம் தெரிவிக்கமுடியாதென்றும் கூறினார். ரிச்சேர்டு யாதொரு கேள்வியும் கேட்காமலும், ஆத்திரத்தைச் சிறிதளவும் காட்டாமலும், எல்லாம் எப்படி நடக்கிறது பார்ப்போமென்று பொறுமையுடன் காத்திருப்பவனைப் போலத் தோன்றினான். அதுகண்ட டாக்டர் க்ரே, 'நமது கனவான் தம் மனத்தில் ஏதோ செய்வதாகத் தீர்மானித் திருக்கவேண்டும், அல்லது நான் அவன் குணத்தில் எதிர்பாராத இணக்கம் புதிதாக உண்டாயிருக்கவேண்டும்,' என்று நினைத்தார். ரிச்சேர்டு அவ்வாறு நடந்துகொண்டதற்குக் காரண மென்னவெனில், ரிச்சேர்டு, தனக்கு மிஸ்டர் மான்சாடாவினிடத்தில் மிகுந்த பிரியமிருந்ததாகவும், தனக்கு அவர் அதுவரை செய்த நன்றியைத் தான் ஒருபொழுதும் மறக்கமுடியாதென்றும், தான் அவருடன் நேரில் காகிதப்போக்குவரவு வைத்துக்கொள்ளத் தனக்கு அனுமதி தரவேண்டுமென்றும், எவ்விஷயத்திலும் தான் அவருடைய இச்சைப்படியே நடந்துகொள்வதாகவும் டாக்டர் க்ரேக்குத் தெரியாமல் மிஸ்டர் மான்சாடாவுக்கு ஒரு காகிதம் எழுதினதில், அக்கடிதமானது, திரும்பவும் அவன் மிஸ்டர் மான்சாடாவுக்கு நேரில் எழுதமுயன்றால் பணம் அனுப்புவது நின்றுபோய்விடுமென்று மிஸ்டர் மான்சாடாவின் பாங்க் (Bank) அதிகாரிகள் எழுதிய துண்டுக் காகிதத்துடன் அவனுக்குத் திருப்பி யனுப்பப்பட்டது.

இப்படியிருக்கையில், ஒருநாள் சாயங்காலம் ஆடாம் ஹார்ட்லி, சில மாதங்களாகத் தனக்குள்ள வழக்கத்துக்கு விரோதமாக, தன்னுடன் வேலை பழகி வந்த ரிச்சேர்டினுடன் தனியே பேசுவதற்காகத் தோட்டத்தில் அவன் தனித்து உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்றான். அப்போது ரிச்சேர்டு அவன் வரவைக் கண்டு, தன் கையிலிருந்த சிறு காகிதக்கட்டைத் தனது சொக்காயின் உட்பையில் போட்டுக்கொண்டு, அருகிலிருந்த மண்வெட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு ஒரு பாத்தியைச் சரியாகக் கட்டுவதில் புத்திமுழுவதையும் செலுத்தியதுபோல் பாசாங்கு செய்தான். ஆனால் அவன் பாசாங்கு செய்ததை ஹார்ட்லி அறியாமற் போகவில்லை.

ஹார்ட்லி அவனை யணுகி, "மிஸ்டர் மிடில்மாஸ்! தங்களுடன் பேசவேண்டுமென்ற இச்சையுடன் வந்தேன். ஆனால் தாங்கள் வேலை செய்யும் மும்முரத்தைப் பார்த்தால், நான் பேசுவதனால் தங்கள் வேலைக்கு இடையூறு ஏற்படுமோ வென்று பயப்படுகிறேன்" என்றான். உடனே ரிச்சேர்டு மண்வெட்டியைக் கீழே வைத்துவிட்டு, "அப்படியொன்றும் பிரமாதமான வேலையில்லை. இதோ வந்தேன்" என்றான். இருவரும் ஓர் புஷ்பக் கொடிப் பந்தலின் கீழே போடப்பட்டிருந்த பலகையின் (Bench) பேரில் உட்கார்ந்தார்கள்.

பிறகு ஹார்ட்லி சிறிது தியக்கத்துடன், டாக்டர் க்ரே தனக்கு வைத்தியத்தில் உண்டாயிருந்த திறமையைப் புகழ்ந்து பேசித் தன்னைத் தமக்கு உதவியாக விருக்கும்படியாகவும், அவ்வாறு இரண்டு வருஷ காலமிருந்து அதற்குள் மெனி தன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள இசையும்படி தான் செய்துவிட்டால், தன்னைத் தொழிலில் தமக்குக் கூட்டாளியாக வைத்துக்கொள்வதாகவும் சொன்னதாக வுரைத்தான். அம்மொழிகளைச் செவியுற்ற ரிச்சேர்டு தனது கர்வத்துக்கு அவமதிப்பு நேர்ந்ததை யுன்னிக் கோபமுற்று, ஆனால் சீக்கிரத்தில் அதைவெகுவாய் அடக்கிக்கொண்டு, டாக்டர் க்ரே தமது பெண்ணைப் பற்றிச் செய்த ஏற்பாட்டினால் ஹார்ட்லிக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகவேண்டுமென்று தான் பிரார்த்தித்ததாகவும், வெகுகாலமாக மெனியுடன் பழகிவந்த ஹார்ட்லிக்கு மெனி அவனை விவாகஞ் செய்துகொள்ள இசையும்படி செய்வது சுலபமான காரியமே யென்றும் சற்று அலக்ஷியமாகக் கூறினான்.

அப்போது ஹார்ட்லி அமைதியுடன், "மிஸ்டர் மிடில்மாஸ்! தாங்கள் மெனியின் அன்புக்குப் பாத்திரராயிருப்பதாக வெகுநாளாக எனக்குச் சந்தேகம். நான் சந்தேகித்தது உண்மையென்பது மெனி தன் பிரியத்தின் நிலைமையை என்னிடம் சொன்னதிலிருந்து தெரியவந்தது. அவள் தகப்பனார் என்னிடம் கூறியதை அவளிடம் சொல்லி, இரண்டு வருஷ காலத்தில் நான் அவளிடம் காட்டும் அன்பினாலும் அவள் தகப்பனாருக்குச் செய்யும் உதவியினாலும் நான் அவளுடைய அன்புக்குப் பாத்திரனாக முயலுவதற்கு இடந்தரவேண்டுமென்று அவளைக் கேட்டுக்கொண்டேன். ஆனால் அவள் உண்மைக் குண சிக... [illegible]யாதலால், தான் வெகுகாலமாகத் தங்களை[illegible]தலித்து வருவதாகவும், தனது தந்தை[illegible] அனுமதியின்றித் தங்களை அவள் மணந்து கொள்ளமாட்டாளே யெனினும், தங்களையன்றி வேறொருவரைக் காதலிப்பது தனக்கு அசாத்தியமான காரியமென்றும் தெளிவாகக் கூறினாள்" என்று சொன்னான்.

ரிச்சேர்டு மிடில்மாஸ், சிறிதுகோபத்துடன், தனக்கும் அவளுக்கும் பொதுவான இரகசியத்தைத் தனது அனுமதியின்றி அவள் வெளியிட்டது தகுதியல்லவென்று கூறினான். அது கேட்ட ஹார்ட்லி, "ஐயா! அந்த இரகசியமானது என்னிடம் சொல்லப்பட்டதனால் வெளியாகிவிடுமோவென்ற பயமானது இப்போதுதாங்கள் கோபமுறுவதற்குக்காரணமாயிருக்குமாயின், என்னுடைய மனம் பின்னால் ஒடிந்து போகாமலிருப்பதற்காக மெனி இவ்விரகசியத்தை என்னிடம் சொன்னதனால் எனக்கு அவளிடம் உண்டாயிருக்கும் அளவற்ற விசுவாசமானது, அந்த இரகசியத்தை என்னிடமிருந்து பறிப்பதற்காக என் கைகால்களை வெட்டி என்னைச் சித்திரவதை செய்தபோதிலும் அதை வெளியிடாமலிருக்குமாறு என்னைத் தடுக்கும்" என்றுரைத்தான்.

ஹார்ட்லி அவ்வாறு உண்மையாகத் தனது மனோ நிலைமையைக் கூறியதைக் கேட்ட ரிச்சேர்டும் பண்டு அவர்களுக்குள் இருந்து வந்த நேசத்தைக் காட்டி, "பொறுமை யென்பது காதலர்க்கு அணிகலனாதலால், வெகு நாளாக அவளது அன்பு விஷயத்தில் எனக்குப் பலமான எதிரியாக நான் கருதி வந்த உன்னிடம் எங்கள் இரகசியத்தை மெனி சொன்னதனால் எனக்குச் சிறிது கோபம் உண்டாயிற்று. ஆனால் யோஜித்துப் பார்த்தால் அவள் செய்ததுதான் சரியென்று தெரிகிறது. நமக்குள் சிலகாலமாக ஏற்பட்டிருக்கும் மனவருத்தத்தின் உண்மையான காரணம் அவளுடைய காதலைப்பெற நாம் போட்டி போட்டதுதான். அதை நாம் ஒழித்துவிட வேண்டும். ஹார்ட்லி! எனக்குத் தகுந்தபடி புத்திமதி சொல்ல ஒருவர் வேண்டும். அதற்கு என்

குணத்தை யறிந்த உன்னைத் தவிரத் தக்கவர் வேறெவருமில்லை" என்றான்.

ஹார்ட்லி தான் அவ்வூரைவிட்டு வெகு சீக்கிரத்திற் புறப்படுவதாக உத்தேசித்திருந்ததாகவும், அவ்விதமாக வல்லாமல் வேறுவிதமாகத் தான் மெனிக்கு உதவி செய்ய முடியாதாதலால் தான் புறப்பட்டுப் போகும் வரையில் தன்னால் இயன்ற உதவியை ரிச்சேர்டுக்குச் செய்வதாகவும் தெரிவித்தான். ரிச்சேர்டு தன்னிடத்தில் மெனி காதல்கொண்டிருந்தபோதிலும், டாக்டர் க்ரேக்கு தன்னைக் குறித்து நல்ல அபிப்பிராயமில்லையென்றும், மெனியினிடத்தில் தனக்கு அளவற்ற காதலிராவிட்டால், டாக்டர் க்ரே தனக்குத் தருவதாகச் சொல்லாமல் ஹார்ட்லிக்கு அளித்த ஸ்தானத்தில் தான் இருக்க ஒருநாளும் தனக்கு மனமொவ்வாதென்றும் சொன்னான்.

அதுகேட்ட ஹார்ட்லி, "ரிச்சேர்டு! டாக்டர் க்ரேயின் அபிப்பிராயம் உனக்குத் தெரியாதாகையினால் நீ இப்படிப் பேசுகிறாய். அவர் தமக்கு ஆதிமுதல் உன்னிடமிருந்த அளவற்ற பிரியத்தினால் உன்னைத் தவிர வேறெவரையும் தமக்கு உதவியாகவும் தம் மகளுக்குக் கணவனாகவும் அடைய இஷ்டமில்லாதவராயிருந்ததாகவும், ஆனால் அவருக்கு உதவியாக இருப்பதனால் உனக்குக் கிடைக்கக் கூடிய சொற்ப வரும்படியைக் கொண்டு உன் மனம் திருப்தி யடையாதென்பதும், உலகத்திற் சென்று உன் சொந்த முயற்சியினால் உன்னதமான பதவியை அடைய நீ விருப்பங்கொண்டிருக்கிறாயென்பதும் உனது நடத்தையினால் அவருக்குத் தெளிவாய் விளங்கியதாகவும், உனக்கு மெனியினிடத்தில் உள்ள காதலின் சிறப்பினால், பதவி, பொருள் இவைகளின் மீது உனக்குள்ள பேராசை அகலக்கூடுமேயெனினும், கொஞ்காலத்துக்கெல்லாம் அவை அடக்கமுடியாமல் மீளுமென்றும், ஆகையினால்தான் அவர் தமக்கு உதவியா யிருக்க என்னைத் தெரிந்தெடுத்ததாகவும் கூறினார்" என்றான்.

ரிச்சேர்டு:—ஆ அப்படியா! டாக்டர் க்ரேக்கு விஷயங்களெல்லாம் இவ்வளவு தெளிவாய் விளங்குமென்று நான் நினைக்கவில்லை. அவர் சொல்வது உண்மைதான். சௌந்தரிய மிக்க மெனியை அடைவதான சுகத்தைத் தவிர வேறென்ன சுகம் இங்கு இருக்கிறது? என்னைப்போன்ற வாலிபர்களெல்லோரும் உலகத்திற் சென்று தங்கள் திறமையைக் காட்டிக் கீர்த்தி சம்பாதித்துக் கொண்டிருக்கையில் நான் மட்டும் குதூகலத்துக்கு இடமில்லாத இந்தப் பிரதேசத்தில் தினந்தோறும் செக்கு மாட்டைப்போல் சுற்றிச்சுற்றி வந்து காலங் கழிக்கிறதா? நீ என்ன செய்வதாக உத்தேசம்?

ஹார்ட்லி:—இந்தியா கம்பெனிக்குச் சொந்தமான ஒரு கப்பலுக்கு என் தாயாருடைய நெருங்கிய பந்து தலைவராக (Captain) இருக்கிறார். அந்தக் கப்பலிலுள்ள வைத்தியருக்கு உதவியாக நான் போகப் போகிறேன். கப்பலில் வேலை செய்வது எனக்குத் திருப்திகரமாயிருந்தால், அந்த வேலையிலேயே யிருப்பேன். இல்லாவிடின், வேறு வேலை தேடிக்கொள்வேன்.

ரிச்சேர்டு—இந்தியாவுக்கா போகிறாய்? ஆ! என்ன பாக்கியம்! அந்த பாக்கியம் கிடைத்தால், உலகத்தின் இப்பக்கத்தில் எந்த மனோபீஷ்டங்கள் நிறைவேறாமற் போனாலும் துக்கமிராது. டில்லி, கோல்கொண்டா இந்த நகரங்களுக்குச் செல்லும் பாக்கியம் கிடைப்பது எளிதா? ஒருவனுக்கு அதிருஷ்டம் மட்டும் இருக்குமேயாகில், அவன் இந்தியாவில் தனது வீரியத்தினாலும் தைரியத்தினாலும் அளவற்ற செல்வத்தையும், நிகரற்ற பதவியையும் அடையலாமே! என்னைவிட நீயே மிகுந்த அதிருஷ்டசாலி!"

ஹார்ட்லி:—மெனியைக் கலியாணஞ் செய்து கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றுள்ள உன்னைவிட நானா அதிக அதிருஷ்டசாலி?

ரிச்சேர்டு:—ஆடாம்! அந்தப் பாக்கியம், அதைப் பெறாத உனக்குத் தோன்றுமளவு பெரிதாக என் புத்திக்குத் தோன்றவில்லை. ஒரு பொருள் கையில் கிடைத்த பின்னர், அது கிடைக்குமுன் நாம் அதை மதித்தவளவு மதிக்கிறோமா? இது உலக வியல்பு. ஆயினும் மெனியை அடையாவிட்டால், என்னால் சுகமாக வாழ முடியாது. அவளை நாளைக்கே மணந்து கொள்வதென்றாலும், இவ்வளவு இளம் பருவத்தில் கலியாணஞ் செய்து கொண்டால் மனைவி யென்னும் கால்விலங்கு என்னை முன்

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ நீடின்றி யாங்கே கெடும்.

னுக்கு வர வொட்டாதே யென்பதையும் இல க்ஷியஞ்செய்யாமல், அவளை மணந்து கொண்டு விடுவேன். என்னைவிட மட்ட மனிதர்களெல்லோரும் இலக்ஷமும் கோடியுமாக ரூபாய்களைச் சம்பாதித்துக்கொண் டிருக்கையில் நான் மட்டும் இன்னும் இரண்டு வருஷகாலம் இந்த விகாரமான காட்டில் அலைந்து க்ரௌன் (ஐந்து ஷில்லிங்கு=சுமார் $3\frac{3}{4}$ ரூ) அரை க்ரௌன் இவைகளைத் தேடிச் சேர்க்கவேண்டுமே, அதை நினைத்தால்தான் துக்கமாயிருக்கிறது. இரண்டு வருஷ காலம் காத்திராமல் தப்புவதற்கு ஏதேனும் ஓர் வழி சொல்வாயா?

ஹார்ட்லி.—அத்தியாவசியமான அங்நிபந்தனையை விலக்கிவிடும்படி டாக்டர் க்ரேயினிடம் நான் சொன்னால் அவர் விலக்கிவிடுவதாயிருந்த போதிலும், அப்படிச் செய்யுமாறு சொல்ல எனக்கு மனம் வராது. உனக்கு வயது இருபத்தொன்றுதான் ஆகிறது. சாவதானத்தை உத்தேசித்து, இருபத்து மூன்று வயதாகும் என்னையே டாக்டர் இரண்டு வருஷ காலம் காத்திருக்கச் சொன்னபடியினால், உன் விஷயத்தில் அங்நிபந்தனையை விலக்கமாட்டார்.

ரிச்சேர்டு:—விலக்க மாட்டாரோ என்னவோ. அதிருக்கட்டும். அரைவயிற்றுக் கஞ்சிக்குச் சம்பாதித்துக் கொள்ளக்கூட இடமில்லாத இந்த ஊரில் உழைப்பதைவிட, சீக்கிரத்தில் செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடிய இந்தியாவுக்குப் போய் அங்கு இந்த இரண்டு வருஷ காலத்தையும் கழிப்பது உசிதமல்லவா? உனக்கு என்ன தோன்றுகிறது? என்னுடைய சுபாவத்துக்கு இந்தியாவுக்குப் போய்ப் பொருளீட்டுவதே ஏற்றது. என் தகப்பனர் போர்வீரர், என் பாட்டனரோ பணத்தை வட்டிக்கு விட்டு அபிவிருத்தி செய்பவர். ஆகையினால், நான் இந்தியாவுக்குப் போனால் வெகு சீக்கிரத்தில் பொருளீட்ட முடியும். இங்கிருந்தால் என்ன கிடைக்கும்? டாக்டர் க்ரேக்கு இப்போதுவரும் வருமானத்தைத்தானே இருவரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்? மெனி கிடைப்பதற்கரிய இரத்தினந்தான். ஆனால் அப்படிப்பட்ட இரத்தினத்தைப் பைம்பொன்னபரணத்திலல்லவா வைத்து இழைக்கவேண்டும்? நீ இவ்விஷயத்தில் ஒரு வார்த்தை சொன்னால் டாக்டர் க்ரே அதை ஏற்றுக் கொள்வாரெனத் தோன்று றது. மெனியைக் கலியாணஞ் செய்து கொள்வதற்குக் காக்கவேண்டிய இரண்டு வருஷ காலத்தையும் நான் இந்தியாவில் கழிப்பதற்கு டாக்டர் அனுமதி கொடுத்தால் போதும். அதனால் உனக்கும் லாபமேற்பட இடமுண்டு. எத்தனை போர்களில் நான் சண்டை போட வேண்டியிருக்குமோ? ஏதாவது ஒன்றில் நான் உயிர் துறந்தால், மெனியை நீ எளிதில் அடையலாம்.

ஹார்ட்லி:—மிஸ்டர் ரிச்சேர்டு மிடில்மாஸ்! நான் தங்களை இகழ்கிறேனு அல்லது தங்களிடத்து அனுதாபப் படுகிறேனுவென்று சுலபமாய்ச் சொல்ல முடியாது. தங்களுடன் அதிகமாக வார்த்தையாட எனக்கு இஷ்டமில்லை. கடவுள் சந்தோஷம், ஜீவனத்துக்கு வேண்டிய பொருள் இவைகள் உமது கைக்கெட்டும்படி வைத்திருக்க, பதவி, பொருள் இவைகளின்மீது உள்ள பேராசையினால் கடவுள் அளித்திருப்பவைகளை வீசியெறியத் தயாராக இருக்கிறீர்கள். நான் இது விஷயத்தில் டாக்டர் க்ரேக்காவது அவர் பெண்ணுக்காவது புத்திமதி கூறுவதாக விருந்தால், இயற்கையில் எவ்வளவு புத்தியிருந்த போதிலும் எளிதில் புத்தியீனனைப்போல் நடந்து கொள்ளக் கூடியவராயும், எவ்வளவு யோக்கியனாக வளர்க்கப்பட்டிருந்தும் பேராசையினால் தூண்டப்பட்டு கிராதகர்கள் செய்கைகளையும் செய்யத் துணிபவராயும் உள்ள உம்மோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது என்றுதான் புத்தி கூறுவேன். ஆனால், இவ்விஷயத்தில் நான் அவ்வாறு புத்தி கூறினால் அவர்களுக்கு என்மீது சந்தேகமுண்டாகும். உம்மை இனிச் சந்திக்காமலிருக்குமாறு இப்போதே இவ்வீட்டை விட்டு அகலுகிறேன். அசட்டு அகங்காரத்தினாலும் புத்தியீனத்தினாலும் ஏற்படக்கூடிய அபாயங்களினின்றும் கடவுள் யோக்கியர்களையும் கபடமறியாதவர்களையும் காப்பாற்றுவாராக!

இவ்வாறு கூறிவிட்டு, ஹார்ட்லி அலக்ஷியமாக அத்தோட்டத்தைவிட்டு அகன்றான். அவன் சிறிதுதூரம் சென்றதும், ரிச்சேர்டு தனது மனச்சாக்ஷியினால் நிந்திக்கப்பெற்று, "ஆடாம்! ஆடாம்! நில்! உன்னிடம் உண்

...கிறேன், நில்!" என்று கூவினான். ...அவன் மொழிகள் ஹார்ட்லியின் காதில் ...ததனாலோ, ஹார்ட்லியின் தீர்மானத்தை ...ற முடியாததனாலோ, ஹார்ட்லி திரும்பி ...பாராமல் அகன்றான்.

ஹார்ட்லி தோட்டத்தை விட்டு நீங்கிய பின், ரிச்சேர்டு தனது இயற்கைக் குணத்தை மீண்டும் அடைந்து, "அவன் இன்னும் ஒரு நிமிஷம் இருந்திருந்தால், என் மனத்திலுள்ளவைகளையெல்லாம் அவனிடம் சொல்லியிருப்பேன். என்ன ஆச்சரியம்! இந்த நாட்டுப்புறத்தானை எதிர்த்துப் பேசமுடியவில்லையே என்னால்! மெனிக்ரே தான் இவனை மணந்துகொள்வதில்லையென்று சொல்லிவிட்டாளே. பிறகு அவள் என்னசெய்தால்தான் இவனுக்கென்ன? மான்சாடா பாட்டனார் செய்ய வேண்டிய கடமையைச் செய்திருப்பானேயாகில், இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு இவ்வூரிலேயே வாழ்ந்திருக்கும் யோஜனை செய்ய இடமிருக்கும். அதற்குத்தான் இடமில்லாமற் போய்விட்டது. அதெல்லாம் முடியாது. இந்தியாவுக்குப் போய் ஏராளமாய்ப் பொருள் சம்பாதிக்க வேண்டும். அதுவிஷயமாய்ச் சீக்கிரத்தில் என் சிநேகிதனைக் கண்டு பேசவேண்டும். போகிறேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே தோட்டத்தைவிட்டு அகன்றான்.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

நூல் நூற்பதன் ஆனந்தம் :—மகாத்மா காந்தி கத்தியவார்ப் பகுதியில் யாத்திரை செய்தபொழுது, பவநகர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மாகதா என்ற கிராமத்தில் நடந்த கூட்டத்தில் பவநகர் மந்திரியான ஸர் பிரபாசங்கர பட்டணி செய்த பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:— * ஆரம்பத்தில் ராட்டினத்தில் நூல் நூற்க ஆரம்பித்தபொழுது எனக்குக் கஷ்டமாகத்தானிருந்தது. ஆனால் தற்சமயம் அதனால் எவ்வளவு ஆனந்தம் உண்டாகிறதென்பதை என்னால் எடுத்துரைக்க இயலவில்லை. நான் ராட்டினத்தைப் படுக்கைக்கருகில் வைத்துக்கொள்ளுகின்றேன். இரண்டு மாதத்திற்கு முன்பு செய்து கொடுத்த பிரமாணத்தை நிறைவேற்றுவதற்காக நான் காலையில், சிற்றுண்டி கொள்ளுமுன்பு நூல் நூற்கின்றேன். அது மாத்திரமல்லாமல், வயோதிகப் பருவத்தின் காரணமாகவும் சமஸ்தான வேலையினால் ஏற்படும் தொல்லையின் காரணமாகவும் தூக்கம் வாராமலிருக்கும்பொழுது நான் படுக்கையை விட்டெழுந்து நூல் நூற்று, ராட்டினம் சுழலுவதால் உண்டாகும் ரீங்காரத்தில் எனது கவலைகளைப் போக்கிக்கொண்டு வருகின்றேன். நான் இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகக் கூட அதனருகில் உட்கார்ந்து எனது மனத்திற்குப் பிடித்த பாடல்களைப் பாடிக்கொண்டே நூல் நூற்பேன். இதனால் இரண்டுமணி நேரத்திற்குப் பிறகு எனக்குக் களைப்பு ஏற்படுவதில்லை. ஆனால் மனச்சாந்தியும் தேகசௌகரியமும் ஏற்படுகின்றன. பணக்காரர்கள் ஏன் நூல் நூற்கவேண்டுமென்ற கேள்வியை ஒருவர் அடிக்கடி கேட்க நேரிடுகிறது. மற்றவர்களை எல்லாம்விடப் பணக்காரர்களே அசியம் நூல் நூற்கவேண்டுமென்று நான் கூறுவேன். பணக்காரர்களுக்குக் கவலையைப் போக்கிக் கொள்ளவோ, அன்றி தேகப் பயிற்சி செய்வதற்கோ ஏதேனும் இருக்கவேண்டியதவசியம். அவர்களுக்கு ராட்டினத்தைவிடச் சிறந்த சாதனம் வேறு ஏதேனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எங்குபோனாலும் ராட்டினத்தைப்பற்றி ஏதாவது புதிதாகச் சொல்ல மகாத்மாவிற்கு விஷயம் கிடைக்கின்றது. ஆனால் நான் சொல்ல விரும்புவது ஒன்றுதான். அது என்னவெனில், உங்களது மாடுகளை அடித்துத் துன்புறுத்தி உங்களது நிலத்தைப் பயிரிட்டு அதில் விளையும் பருத்தியைத் தரகர்களிடம் அயல் நாட்டிற்கு அனுப்புமாறு விற்றுவிடுவது மிகவும் பரிதாபிக்கக் கூடிய செயலாகும். நீங்கள் எந்தப் பருத்தியை விளைவித்தபோதிலும் அதைக்கொண்டு நூல் நூற்கவேண்டும். அவ்வாறு செய்தால் உங்களுக்குச் சற்று அதிகப் பணம் கிடைக்கும். அதைக்கொண்டு உங்களுடைய செலவைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். ராட்டினத்தில் நூல் நூற்பதால் உண்டாகும் ஆனந்தத்தை நான் கண்டு[illegible]